பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 26 செவ்வாய்க்கிழமை (09~04~2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:135



நேற்றுவரை பரமஎதிரிகள் இன்று நண்பர்களாக நெருங்கி கரங்களை இறுகப் பற்றிக்கொண்ட அபூர்வ காட்சி. யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர வீஜேசூரியவும் புலிகளின் தளபதி கேணல் பானுவும் நேற்று முகமாலையில் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம். கேணல் தீபன் நடுவில் காணப்படுகின்றார்.

## சமாதான சூழ்நிலை உருவாக புலிகளின் பலமே மூலகாரணம்!

### நல்லூர்க் கூட்டத்தில் புலிகள் பிரமுகர் ஆஞ்சநேயர்

நல்லூர்,ஏப்.9

பல்லாயிரக்கணக்கான போராளிகளின் உயிர்த் தியாகத்தினாலும் தமிழீழ மக்களின் ஒட்டுமொத்த பங்களிப்பினாலும் உருவாகிய பலமான நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பு இருப்பதே இன்றைய சமாதான சூழ்நிலை ஏற்பட மூலகாரணமாகும்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் போராளிகளுக்கு தலைமை வகித்து வந்த புலிகள் பிரமுகர் இளம்பரிதி (ஆஞ்சநேயர்) இவ்வாறு தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்களால் அழைத்துவரப்பட்ட போராளிகள் நேற்று மாலை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதியில் - தியாகி திலீபன் உண்ணாவிரதம் அனுஷ்டித்து உயிர்துறந்த இடத்தில் - நடந்த வரவேற்புப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்மாவட்ட வரவேற்புக் குழுவின் தலைவர் எஸ்.பரமநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் புலிகள் பிரமுகர் இளம்பரிதி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வாழ்வுரிமைக்கான போராட்டத்தின் அடித்தளமாக இருப்பவர்கள் மக்களே. போராட்டத்தின் ஒவ்வொரு வெற்றிக்கும் ஆதாரமானவர்கள் மக்களே. அதை இன்று நேரில் கண்டு கொண்டோம்.

கடந்த காலங்களில் எமது போராட்டத்தை அழிப்பதற்காகப் புலிகளையும் புலிகளை அழிப்பதற்காக மக்களையும் சிங்கள அரசுகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

### வரலாறு காணாத மாபெரும் மக்கள் எழுச்சி

# யாழ்.குடாநாடே கிளர்ந்தெழுந்து புலிகளுக்கு உற்சாக வரவேற்பு!

## முகமாலையில் 50ஆயிரம் பேர் திரண்டு போராளிகள் புகழ் பாடி ஆர்ப்பரித்தனர்!

முகமாலை,ஏப்ரல்9

**சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று குடாநாடு மீண்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு இங்கு உற்சாகமாக வரவேற்பு அளிக்கப்பட்டது.**

**சுமார் 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வழமையான பணிகளை நிறுத்திவிட்டு தங்கள் உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட போராளிகளை வரவேற்க முகமாலைப் பகுதியில் கடல் எனத் திரண்டு ஆர்ப்பரித்த காட்சி வரலாற்றுப் பெருமைமிக்க நிகழ்வாய் அமைந்தது.**

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி குடாநாட்டுக்கான தரைப்பாதை நேற்று திறக்கப்பட்ட கையோடு போராளிகள் அந்த வீதி வழியே யாழ்ப்பாணத்துக்கு வந்தனர்.

குடாநாட்டு விஜயத்துக்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் தரப்பினர் நேற்றுக்காலையே நிறைவு செய்து பயணத்துக்கான ஆயத்தங்களுடன் தமது பக்கத்தில் காத்திருந்தனர். எனினும் ஏ-9 கண்டி வீதியைத் திறப்பதில் கடைசிவரை காணப்பட்ட இழுபறி நிலை காரணமாக அவர்களது வருகை தாமதமடைந்தது.

நேற்றுக்காலை 8.30மணிக்கு முகமாலை ஊடாக வருகை தர இருந்த போராளிகள் பிற்பகல் 1.30 மணியளவிலேயே அப்பகுதியைத் தாண்டிவர முடிந்தது.

முகமாலையில் புலிகளின் முன்னரங்கப் பகுதியில் (14ஆம் பக்கம் பார்க்க)

நேற்றைய நிகழ்வுகளின் படத் தொகுப்புகளை 2,3,12ஆம் பக்கங்களில் பாருங்கள்.

### வன்னியிலிருந்து செய்தியாளர்கள் வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.9

வன்னியைச் சேர்ந்த ஊடகவியலாளர் குழு ஒன்றும் நேற்று கண்டி வீதி வழியே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

'புலிகளின் குரல்' வானொலி, 'ஈழநாதம்' பத்திரிகை, நிதர்சனம் தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களைச் சேர்ந்த செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள், பொறுப்பாளர்கள் உட்பட 13பேர் கொண்ட குழுவினரே இங்கு வந்துள்ளனர்.

நல்லூரில் நேற்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் வைத்து அவர்கள் பொதுமக்களோடு உரையாடினர். 'ஈழநாதம்' பத்திரிகைப் பிரதிகள் அங்கு விநியோகிக்கப்பட்டன.(ஜ-3)

# மிருசுவிலில் படையினர் போட்ட தடையை உடைத்துப் பாய்ந்தது மக்கள் வெள்ளம்!

## சமாளிக்க முடியாது திணறியது இராணுவம்

- முகமாலையில் இருந்து 'உதயன்' அலுவலகப் பிரதிநிதிகள் -

முகமாலை,ஏப்.9

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளை வரவேற்பதற்காக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கண்டி வீதி வழியே திரண்டுவந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நேற்றுக்காலை மிருசுவில் சந்தியில் வைத்துப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனால் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே அங்கு முறுகல் நிலை தோன்றியது. மக்களைத் தொடர்ந்தும் அங்கு தடுத்து நிறுத்துவதற்கு படையினர் பலத்த பிரயத்தனம் செய்தனர். ஆனால் ஒரு கட்டத்தில் படையினரின் தடைகளை உடைத்து எறிந்தவாறு கரைபுரண்ட வெள்ளம் என மக்கள் கண்டி வீதி வழியே ஆர்ப்பரித்து ஓடினர். எதுவுமே செய்யமுடியாது கைகட்டிப் பார்த்து நிற்கவேண்டியநிலை படையினருக்கு ஏற்பட்டது.

நேற்று அதிகாலையிலேயே பாதை திறக்கப்பட்டு போராளிகள் குடாநாட்டுக்குள் வருவர் என்ற செய்தி பரவியதை அடுத்து காலை 6.30 மணி முதலே அணி அணியாக மக்கள் கூட்டம் முகமாலை நோக்கித் திரளத் தொடங்கியது. சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு திரள்வது கண்டு மிரண்ட படையினர் முதலில் அவர்களை

(14ஆம் பக்கம் பார்க்க)



தடையை உடைக்கும் மக்களும் தடுத்துநிறுத்தும் படையினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




வீடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை வரவேற்பதற்காக நேற்று மாலை நல்லூர் கோயில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் போராளிகள் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும் புலிகள் பி ர முகர் இளம்பரிதி(ஆஞ்சநேயர்) உரையாற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.



விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்களான இளம்பரிதி, பாப்பா, தமிழினி மற்றும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை, சந்திரசேகரக்குருக்கள், வண. ஜெயக்குமார் அடிகள் ஆகியோர் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.



புலிகளை வரவேற்க நல்லூர் வீதி எங்கும் திரண்டிருந்த மக்கள் வெள்ளம்.



கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் புலிகளின் பிரமுகர் பாப்பா, ஈகச்சுடர் ஏற்றுவதையும் போராளிகள் வரிசையில் நின்று அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

படத்தொகுப்பு:
பொ.இராஜேஸ்வரன்
றோய் மதிவதனன்



உற்காக மேலீட்டில் திளைத்த மக்கள் போராளி ஒருவரை தோளில் சுமந்து வரும் காட்சி.

## முகமாலை செல்லவிடாது

# மிருசுவிலில் செய்தியாளரையும் படையினர் தடுத்து வைத்தனர்!

யாழ்ப்பாணம்,ஏப்.9

நேற்றைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற உள்ளூர் மற்றும் தென்னிலங்கை செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்களை மிருசுவில் பகுதிக்கு அப்பால் செல்லப் படையினர் அனுமதிக்கவில்லை.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து கண்டி வீதி வழியே நேற்றுக்காலை முகமாலை நோக்கிச் சென்ற பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும் அவர்களது வாகன அணிகளையும் மிருசுவில் சந்தியில் வீதித்தடை போட்டு படையினர் மறித்தனர். செய்தி சேகரிப்பதற்குச் சென்ற ஊடக வியலாளர்களும் அங்கேயே தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அங்கு கடமையில் இருந்த படை அதிகாரிகளிடம் நேற்றைய சம்பவங்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கி அப்பால் செல்ல தங்களை அனுமதிக்குமாறு செய்தியாளர்கள் பலமுறை வற்புறுத்தியபோதும் படையினர் அனுமதி வழங்கமறுத்துவிட்டனர்.

சுமார் இரு மணிநேரம் செய்தியாளர்கள் அங்கேயே தரித்து நிற்க வேண்டி ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் அங்கிருந்து தங்களை அப்பால் செல்ல அனுமதிக்குமாறு கோரி வீதியின் நடுவே தரையில் அமர்ந்து மறியல் செய்ய செய்தியாளர்கள் முயன்றனர். அதற்குள் பொதுமக்களின் ஆர்ப்பரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமற் போகவே படையினரின் கட்டுப்பாட்டை மீறி மக்கள் தடைகளைத் தாண்டி அப்பால் விரையத்தொடங்கினர். அதன் பின்னரே செய்தியாளர்களும் தங்கள் வாகனங்களில் முகமாலை நோக்கிச் செல்ல முடிந்தது. (ஐ-ம-3-9-173-180)

# கொடிகாமம் மாவீரர் இல்லத்தில் போராளிகள் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்.9

நேற்று யாழ்.வந்த விடுதலைப் புலிகள் முதலில் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று ஈகைச்சுடர் ஏற்றி மறைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று பிற்பகல் கொடிகாமம் சந்தியை வந்தடைந்த போராளிகள் அங்கிருந்து பொதுமக்கள் புடைசூழ கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்றனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்திருக்க புலிகளின் பிரமுகர் பாப்பா ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.


"தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே" என்ற துயிலும் இல்லப்பாடல் ஒலிக்க விடப்பட்ட போது அங்கு கூடியிருந்த மக்களில் பலரது கண்களில் நீர் வழிந்தோடியதைக் காண முடிந்தது.

'வீர வணக்கம்' எனப் பொறிக்கப்பட்ட, உடைந்த நிலையில் காணப்பட்ட சிறிய வளைவு ஒன்றின் முன்பாக மலர் மாலைகள், பூக்கள் என்பவற்றை வைத்துப் போராளிகள் அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து வேறு சிலரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

(ம-4-6-9-12-180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முகமாலையில் புலிகளின் கடைசி நிலைக்கு அப்பால் உள்ள வரவேற்புப் பலகை.

நேற்றைய வைபவத்தில் கலந்துகொண்ட போராளிகள்....



யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜே சூரியவும் அதிகாரிகளும் போராளிகளை எதிர்பார்த்து கண்டி வீதியின் நடுவே காத்து நிற்கின்றனர்.






படையினரின் பகுதி நோக்கி வருகின்ற போராளிகள்....



கண்காணிப்புக் குழுத் தலைவர் போராளிகளை அழைத்து வருகிறார்...



புலிகளின் தளபதி கேணல் தீபனும் யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரியவும் கைலாகு கொடுத்த காட்சி.

# பாதை திறப்பு நிகழ்வில் அமைச்சர்கள் இல்லை!

யாழ்ப்பாணம்,ஏப்.9

நேற்று முகமாலையில் நடைபெற்ற கண்டி வீதித் திறப்பு மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் யாழ்.வருகை ஆகிய முக்கிய நிகழ்வுகளில் அரசுத் தரப்பில் அமைச்சர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன கண்டி வீதியைத் திறந்து வைப்பார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. நேற்று அவரும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் காலையில் யாழ்நகரில் இருந்து வாகன அணியாக முகமாலை நோக்கிப் புறப்பட்டனர்.

எனினும் வழியில் அவர்கள் மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியோடு தங்கள் பயணத்தை நிறுத்திக் கொண்டனர்.

நேற்றைய நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அரசு மேலிடத்தில் இருந்து கடைசி நேரத்தில் விடுக்கப்பட்ட உத்தரவினை அடுத்தே அமைச்சர்கள் எவரும் அங்கு வருகைதரவில்லை என்று அறியவந்தது. இதேபோன்று விடுதலைப் புலிகள் தரப்பிலும் உயர்மட்ட அரசியல் பிரமுகர்கள் எவரும் நேற்றைய நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை.

(ஐ-ம-3-4-5-6-7-8-9-10-12-13-180)

## பளையில் மீளக்குடியமர்வது இப்போதைக்கு சாத்தியப்படாது

தென்மராட்சி,ஏப்.9

யாழ். - கொழும்பு வீதி நேற்று திறக்கப்பட்டபோதிலும் பளைப் பிரதேச மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடிமர்வது இப்போதைக்கு சாத்தியப்படாது எனத் தெரிய வருகிறது.

பளைப் பிரதேசத்தில் உள்ள வீடுகளைப் பார்வையிடச் செல்பவர்கள் முகமாலையில் உள்ள முகாமில் தமது வாகனங்களைப் பதிவு செய்துவிட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வாகனத்தில் சென்று விட்டு அதே வாகனத்தில் மாலை 4.30 மணிக்கு முன்னர் திரும்பவேண்டும் எனவும் -

இங்கிருந்து பொருள்கள் எடுத்துச் செல்வதையோ அங்கிருந்து பொருள்கள் கொண்டு வருவதையோ தவிர்த்துக்கொள்ளுமாறும் -

படையினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ம-117)

## மிதி வெடியில் சிக்கி காயம்

தோழில் சுமந்துவந்த கல்லை நிலத்தில் போட்ட சமயம் அது மிதி வெடியில்பட்டு வெடித்துச் சிதறியதால் ஒருவர் காயமடைந்தார்.

இளவாலை, முள்ளானைப் பகுதியில் நேற்றுகாலை 8.30 மணிக்கு நடந்த இந்தச் சம்பவத்தில் கந்தரோடைப் பகுதியைச் சே[illegible] வரன் ராஜ்குமார் (வ[illegible]) இளைஞனே காயமடைந்தவராவார்.

(ம-6-4)

## மாவீரர் இல்லங்களில் இன்று அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்.9

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் இன்று கோப்பாய் மற்றும் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று அஞ்சலி செய்யவுள்ளனர். (ம-10)

## மோ.சைக்கிள்களை மோதிய புல்டோசர்

நேற்றுக்காலை மிருசுவில் சந்தியில் முகமாலை நோக்கிச் செல்வதற்காக மக்கள் முண்டியடித்துக் கொண்டு நின்ற சமயம் அப்பகுதி ஊடாக வந்த படையினரின் புல்டோசர் வாகனம் ஒன்று திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வீதியோரமாக நின்ற வாகனங்களை மோதியது.

இதனால் பொதுமக்களின் மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்தன. [illegible] எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

(ஐ-9)

## பூரண கும்பம் வைத்து போராளிகளுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

போராளிகளின் யாழ்.வருகையை ஒட்டி நேற்று கொடிகாமம் முதல் யாழ்.நகரப் பகுதி வரையான கண்டி வீதி மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சியளித்தது.

அண்மையில்தான் தங்கள் வீடுகளில் குடியமர்ந்த மக்கள் தங்கள் வீடுகளின் வாயில்களில் பூரண கும்பம் வைத்து போராளிகளை வரவேற்றனர். சில இடங்களில் போரளிகளுக்கு மக்கள் ஆராத்தி எடுத்து வரவேற்றதையும் காணமுடிந்தது.

போராளிகளோடு நீண்ட வாகன அணியில் வந்த பொதுமக்களுக்கு ஆங்காங்கே குளிர்பானங்கள் வழங்குவதிலும் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

முக்கிய சந்திகளில் மங்கள வாத்தியங்களுடன் காத்திருந்த கலைஞர்கள் மங்கள இசை வழங்கினர். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் மற்றும் தொண்டர்கள் முதலுதவி மற்றும் வீதி ஒழுங்குப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

வீதிகள் தோறும் நின்று நீண்ட நேரம் காத்திருந்து மக்கள் போராளிகளை வரவேற்றனர்.

(ஐ-3-4-5-6-7-8-9-10-15-117-180)

### தண்ணீர் தேடி அலைந்தவேளை

## மக்களது தாகம் தீர்த்த முகமாலைப் படையினர்!

யாழ்ப்பாணம்,ஏப்.9

வரண்ட போர்ப் பிரதேசமான முகமாலைப் பகுதிக்கு திடீரென பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒரே சமயத்தில் திரண்டு வந்ததால் அங்கு குடிதண்ணீருக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டது.

கடைகளோ வீடுகளோ இல்லாத அந்தப் பிரதேசத்துக்கு வந்த மக்கள் தண்ணீர் தேடி அலைந்தனர். கண்டி வீதயில் மிருசுவில் முதல் முகமாலை வரையான பிரதேசத்தின் இருமருங்கிலும் உள்ள படை முகாம்களுக்குச் சென்ற மக்கள் படையினரிடம் தண்ணீர் வாங்கி அருந்தினர்.

தமது பயன்பாட்டுக்காக சொற்ப அளவில் வைத்திருந்த குடிதண்ணீரை படையினர் பொதுமக்களின் தாகம் தீர்க்க வழங்கியதைக் காண முடிந்தது.

இதேவேளை -

ஜேர்மன் தொண்டு நிறுவனம் தண்ணீர்தொட்டிகள் மூலம் மாநகர சபையினர் குடிதண்ணீரை விநியோகித்தனர். படையினரின் தண்ணீர் பவுஸர்கள் மூலமும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

(ஐ-3-9-180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சுஜீதா குணசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (796291885V), விசேட அடையாள அட்டை (0901034725), பல்கலைக் கழக அடையாள அட்டைகள் என்பன 07.04.2002 அன்று நல்லூர் இளங்கலைஞர் கலாமண்டபத்தில் நடைபெற்ற அரங்கேற்றத்தின்போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கே.வீ.சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (2668)

நீதிராஜா நிஷாந்தி என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 091043674), பாடசாலை அடையாள அட்டை என்பன துன்னாலைக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 163, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் உள்ள யசோ மோட்டோர்ஸ் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (2674)

## கண்ணாடி சிமினிக்கு பெரும் தட்டுப்பாடு

கோப்பாய்,ஏப்.9

யாழ்.குடாநாட்டில் லாம்புச் சிமினிகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

சிமினிகளை தென்பகுதிகளில் இருந்து கொண்டுவருவதில் ஏற்படும் பெரும் சிரமமே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை இயங்கிய வேளையில் இவற்றிற்கு எதுவித தட்டுப்பாடும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-72)

## பட்மின்ரன் போட்டி

யாழ்ப்பாணம்.ஏப்.9

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம் மக்கள் வங்கி வடலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் 18 வயது ஆண்களுக்கான பட்மின்ரன் போட்டி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெறும். (க)

## தென்மராட்சியை கட்டியெழுப்ப மூன்றாண்டுத் திட்டம்

தென்மராட்சி,ஏப்.9

யுத்தத்தினால் சீரழிந்துள்ள தென்மராட்சிப் பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மூன்றாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது (க-117)

## சாவகச்சேரி நகர சேதமுற்ற கடைகளின் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,ஏப்.9

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களின் விவரங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

வியாபார நிலையங்களை நடத்தியோர், வியாபார நிலைய கட்டட உரிமையாளர் ஆகியோரின் விவரங்கள் தனித்தனியாக படிவங்கள்மூலம் திரட்டப்படுகின்றன.

இப்படிவங்கள் நேற்றுமுன்தினம் நகர்ப்பகுதி வர்த்தகர்களுக்கும் கட்டட உரிமையாளர்களுக்கும் சாவகச்சேரி கைதொழில் வணிகர் மன்றத்தினால் வழங்கப்பட்டன. இப்படிவத்தினைப் பெற்றுகொள்ளாத வர்த்தகர்களும் உரிமையாளர்களும் எதிர்வரும் 17ஆம் திகதி வணிகர்மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

IBS கல்வி நிறுவனம
சுண்டுக்குளி.
கணக்கீடு
A/L 2003
Wed., Fri. 6.15a.m.
பங்குடமை முடிவுக் க/கு
(சேர்தல், விலகல்) ஆரம்பம் 10.04.2002
A/L 2004
Tue., Thu. 6.15 a.m.
தனிவியாபார முடிவுக் க/கு
ஆரம்பம் 11.04.2002 (2670)
Mr.S.Rajani

We Serve

## உரும்பிராய் லயன்ஸ் கழகம்
### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

மேற்படி சீட்டிழுப்பு 07.04.2002 ஞாயிறு மாலை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. பரிசுபெறும் இலக்கங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | இலக்கம் | 1660 |
| இரண்டாம் பரிசு | இலக்கம் | 1466 |
| மூன்றாம் பரிசு | இலக்கம் | 1900 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

| | |
|---|---|
| (1) 1914 | (6) 1375 |
| (2) 1975 | (7) 0414 |
| (3) 3781 | (8) 0504 |
| (4) 1997 | (9) 3645 |
| (5) 4164 | (10) 1976 |

பரிசில்கள் 21.04.2002 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் எமது கழக மாதாந்தக் கூட்டத்தில் வழங்கப்படும்.

V.சின்னத்துரை J.P. தலைவர் (2673) T.திருநாவுக்கரசு, செயலாளர்

## இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

அகம் மகிழ மண்ணில் 14 - 11 - 1961



உளம் நெகிழ விண்ணில் 01 - 04 - 2000

### அமரர் சங்கரப்பிள்ளை பாலசிங்கம்
(பாலன்)

திதி:-09.04.2002

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
எம்மை அரவணைத்து வளர்த்து
மெழுகுவர்த்தியாய் உருகி எம் வாழ்வு சிறக்க வழிகாட்டினீர்கள்
ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு; எனினும் "அப்பா"
என்றழைப்பதற்கு யாருமேயில்லை.
இன்னொரு முறை மறுஜென்மம் எடுத்து வந்து
எம் அகங்களிக்க வாருங்கள் அப்பா எம்மிடத்தினிலே!


என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
அன்புத்தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், மாமன்மார், மாமிமார், மைத்துனர்மார், மைத்துனிமார், மருமக்கள்மார், பெறாமக்கள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(C/21556)

## வட இலங்கை சங்கீத சபையினரின் கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 22 - 07 - 1917



மறைவு 15 - 03 - 2002

### அமரர் சங்கீத கலாபூஷணம் பேரம்பலம் சந்திரசேகரம் எம்.ஏ.

வட இலங்கைச் சங்கீத சபையின் நீண்டகால உபதலைவரும், வட பிரதேச இந்துப் பேரவையின் ஸ்தாபக தலைவரும் ஆகிய **சந்திரசேகரம்** அவர்கள் காலமான செய்திகேட்டுத் துயரடைகின்றோம். அன்னார் சைவசமய மேம்பாட்டிற்கும், இசைத்துறை வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு வட இலங்கைச் சங்கீத சபையினராகிய நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- செயலாளர்.

தலைவர்,
வட இலங்கைச் சங்கீத சபையினர்,
கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C/21547)

## பிறந்ததின வாழ்த்தும் சேவைநலம் பாராட்டலும்



வட்டு.தெற்கு மாதர் சங்கத் தலைவி

### துரைராசா கமலேஸ்வரி

அவர்கள் பல துறைகளில் சேவைகளை சிறந்த முறையில் செய்து வருகின்றார். இவர் அறுபத்தைந்து வயதிலும் உணவு பதனிடுதல் போதனாசிரியராகவும், வட்டுக்கோட்டை இலங்கை செஞ்சிலுவைச் சங்க சுகாதாரத் தொண்டராகவும், கொம்ரெக், கண்ணகை அம்பாள் பரிபாலனசபை நிர்வாக அங்கத்தவராகவும் கடமையாற்றி வருகின்றார். பல பரிசில்களும் பெற்றுள்ளார். இவரின் சேவைகள் மேன்மேலும் வளரவேண்டும் என இன்றைய பிறந்த தினத்தில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாதர் சங்க உறுப்பினர்கள்,
நண்பர்கள், உற்றார், உறவினர்.

(சி-21555)

## தென்மராட்சி பனை, தென்னை வள அ.கூ.சங்கங்களின் ஆலோசனைக் கூட்டம்

யுத்த அனர்த்தங்களினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதியில் உள்ளடக்கிய பனை - தென்னை வள அ.கூ. சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரது மாதாந்த ஊதியத்தை பெற்றுக்கொள்வதற்கான பூர்வாங்க நடவடிக்கை எடுப்பதுதொடர்பாகவும், அழிந்துபோன எமது சங்கங்களைப் புனரமைப்பது சம்பந்தமாகவும் ஓர் ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் (10.04.2002) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் யா/பனை, தென்னை வள அ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சாவகச்சேரி, கொடிகாமம், பளை பனை, தென்னை வள அ.கூ.சங்கங்களினதும், தென்மராட்சிக் கொத்தணியினதும் நிர்வாக உறுப்பினர்களும், பணியாளர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- பனை, தென்னை வள அ.கூ.சங்கங்களின் ஆரம்பகால ஸ்தாபகத் தலைவரும், பனை அ.சபையின் முன்னாள் தலைவருமான திருமிகு க.நடராசா அவர்களும், பனை அ.சபையின் தற்போதைய தலைவர் திருமிகு பொ.சிவபாதம் அவர்களும் சமுகம் தரவுள்ளனர்.

சாவகச்சேரி ப.தெ.வள அ.கூ.சங்கம், தலைவர்

J.R.M. TEX

தரம்மிக்க வர்ண ஜவுளித்தினுசுகள் பொக்ஸ்சேட், ஸ்கேட், பிளவுஸ், சல்வார் கமிஸ் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

10% சிறப்புத் தள்ளுபடி
சாறிவகைகள், ஸ்கேட்டன் பிளவுஸ்

☆ வாடிக்கையாளர், நண்பர்களுக்கு J.M.R. TEX இற்கு எந்தவொரு கிளை நிறுவனமும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

ஜே.ஆர்.எம்.புடைவை அகம்

பிரதான வீதி, பருத்தித்துறை. (2672) உரிமையாளர் M.றூபேட்

GEOGRAPHY - 2004 A/L
and 2003 A/L Paper Class
BY: S.Ainkaran B.A.(HONS) (Geo.-Spe.)

| நிறுவனம் | 2004 A/L | 2003 A/L Paper Class |
|---|---|---|
| SUBRA (14) சித்தன்கேணி. | Sat., Sun.11-12 Mon. 5-6 | Mon.,Wed., Fri. 6-7a.m. |
| ஐடியல் அக்கடமி சண்டிலிப்பாய். | Wed., Fri.3-4 | Wed., Fri. 4-5 |
| பாரதி அக்கடமி நல்லூர். | Mon.,Tue. 3-4 | Mon.,Tue.4-5 |
| நாவலர் ஆனைப்பந்தி. | Sat., Sun. 12-1 | Sat., Sun. 1-2 |
| Chemistry Center கந்தர்மடம். | Sat., Sun.2-3 | Sat., Sun. 3-4 |
| யாழ் கல்வி நிலையம் ஆனைக்கோட்டை. | Wed., Fri.5-6 | Wed.,Fri. 6-7 p.m. |
| பிரத்தியேக வகுப்பு D.SAM, 76/2, கோயில் வீதி, யாழ். | Sat., Sun.5-6 | Sat., Sun. 6-7 p.m. |
| ஐடியல் அக்கடமி காரைநகர். | Sat., Sun.7-8 | Sat., Sun. 8-9 |

Note:- 2002 A/L மாதிரி வினாத்தாள்கள் வெளிவந்துவிட்டது. முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட வினாக்களை உள்ளடக்கியது.

(சி-21554)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம்

யா/நாவற்குழி மகா வித்தியாலய ஆசிரியர்
திரு. சுப்பிரமணியம் கிருபானந்தன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம்

அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(2679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி காக்கும் படையினர் மீது காபூலில் ஏவுகணைத் தாக்குதல்!

காபூல்,ஏப்.9

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் அமைதிகாக்கும் வெளிநாட்டுப்படையினர்மீது நேற்றுமுன் தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சேதங்கள் எதுவும் ஏற்படாத போதும், அமைதிகாக்கும் படையினர் மிகுந்த நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதை இது எடுத்துக்காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

காபூலின் தென்மேற்குப் பகுதியில் இருந்தே ஏவுகணைகள் ஏவப்பட்டிருப்பதாகவும் -



ஆப்கானில் அமைதிப் படையினர்.

ஆப்கான் படையினர் மற்றும் சர்வதேச அமைதிகாக்கும் படையினர் ஆகியோரின் தீவிரக் கண்காணிப்பில் உள்ள காபூலில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றிருப்பது பெரும் அதிர்ச்சியளித்திருப்பதாகவும் -

ஆப்கானின் இடைக்கால அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கான் இடைக்கால அரசின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் நோக்கத்திலேயே ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கடந்த வாரம் இடைக்கால அரசைக் கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சுமார் 160 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தத்தாக்குதலுக்கு தலிபான் அல்லது அல்கெய்டா போராளிகள் காரணமாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

அமைதிகாக்கும் வெளிநாட்டுப் படையின் பேச்சாளர் லெப்டினன்ட் கேர்ணல் பெக்ஹாம், ஏவுகணைத் தாக்குதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மறுபரிசீலனை செய்யும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

107 மில்லி மீற்றர் அளவுள்ள சீனத் தயாரிப்பு ஏவுகணைகளே தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் -

அமைதிகாக்கும் படையினரின் முகாமுக்குள் ஓர் ஏவுகணையும், முகாமுக்கு வெளியே மற்றோர் ஏவுகணையும் வழ்ந்து வெடித்ததாகவும் - கூறப்படுகிறது.

இத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஏவுகணைகள் 1980ஆம் ஆண்டு சோவியத் படைகளுக்கு எதிராகப் போராடிய முஜாஹிதீன் படையினர் பயன்படுத்திய ஏவுகணைகளின் ரகத்தைச் சேர்ந்தவை என்று இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

காபூலில் இருந்து ஜலாலாபாத் செல்லும் பிரதான சாலையில் தாக்குதலுக்கு உள்ளான முகாம் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)



ஆப்கானில் மனிதப் புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட பாமியான் நகரம்.

# 3 பாரிய மனிதப் புதைகுழிகள் ஆப்கானிஸ்தானில் கண்டுபிடிப்பு

ஆப்கானிஸ்தானின் மத்திய பகுதியில் உள்ள பாமியானில் 3பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஐ.நா.பேச்சாளர் மனுவல் அல்மெய்டா சில்வா தெரிவித்தார்.

காபூலில் இருந்து வடமேற்கே 125கிலோ மீற்றர்கள் தூரத்தில் உள்ள பாமியான் விமான நிலையம் அருகே இந்தப் புதைகுழிகள் உள்ளன. கடந்த ஆண்டின் இறுதியில் தலிபான்களின் ஆட்சி அகற்றப்படுவதற்கு முன்பாகக் கொல்லப்பட்ட ஹஜாரா சமூகத்தினரின் உடல்களே இந்தப் புதைகுழிகளில் உள்ளதாகவும் -

அவற்றின் சரியான எண்ணிக்கை இதுவரை தெரியவரவில்லை என்றும் -

ஐ.நா. பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

சிறுபான்மையினரான சையித் ஹஜாரா சமூகத்தினர் 5வருட தலிபான் ஆட்சியில் பல இன்னல்களை எதிர்கொண்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்களான தலிபான்கள் பாமியான் பகுதியில் ஹஜாரா பிரிவினருடன் பல தடவைகள் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூர் பணியாளர்களால் இந்தப் புதைகுழிகள் பற்றி நேற்று ஐ.நா. அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டதாக சில்வா மேலும் கூறினார்.

சர்வதேச எதிர்ப்புகளின் மத்தியில் தலிபான்களால் தகர்க்கப்பட்ட புராதன புத்தர் சிலைகள் இருந்த பகுதி அருகேயே புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீனர் மீது இஸ்ரேல் தாக்குதல்:

# எத்தனை பேர் இறந்தனர் என்று எவருக்குமே தெரியவில்லையாம்

ஜெருசலேம்,ஏப்.9

மேற்குக்கரையில் பலஸ்தீனர்களுக்கு எதிரான இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்று எவருக்கும் தெரியாது என அங்குள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலிய ஹெலி கொப்டர்கள் சன நெருக்கடி மிகுந்த பலஸ்தீன அகதிமுகாம்கள்மீது நடத்திவரும் சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் எவரும் உயிர் பிழைக்கும் சாத்தியம் கிடையாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனத் தீவிரவாதிகள் பெருமளவில் மறைந்துள்ள நகர் என்று இஸ்ரேலியர்கள் குறிப்பிடும் நப்லஸில் இஸ்ரேலிய இராணுவம் ஏவிய 'ஷெல்கள்' தொடர்ந்து வீழ்ந்து வெடித்தவாறு உள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலக அரங்கில்

நேற்று இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி ரமழா நகருக்கு அருகே உள்ள இரு பலஸ்தீனக் கிராமங்களை இஸ்ரேலியப் படைகள் சுற்றிவளைத்துள்ளன. அந்தக் கிராமங்களின் மீது இஸ்ரேலிய டாங்கிகள் தாக்குதல் நடத்தியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனர்கள் மீதான தமது இராணுவ நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படுமே தவிர நிறுத்தப்படமாட்டாது என்று கூறியுள்ளார். (ஒ)

# இஸ்ரேலை எதிர்ப்போர்க்கு சூடானில் பயிற்சி முகாம்கள்

லண்டன்,ஏப்.9

பலஸ்தீனர்களுடன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிரான புனிதப் போரில் ஈடுபடுவதற்காக போராளிகளுக்குப் பயிற்சியளிக்கும் பயிற்சி முகாம்களை நாடெங்கிலும் தாம் ஆரம்பித்துள்ளதாக சூடானின் இராணுவப் பொறுப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

சூடானியப் பாதுகாப்புப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் அஹமட் அபாஸ் அந்நாட்டு தேசியத் தொலைக்காட்சியில் இதனைத் தெரிவித்தார்.

சூடானிய அதிபர் ஓமர் ஹசன் அல் பஷீரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்தப் பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் -

சூடான் உட்பட உலகின் எப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த முகாம்களில் இஸ்ரேலுக்கு எதிரான புனிதப் போரில் ஈடுபடுவதற்குப் பயிற்சி அளிக்க சூடானிய அரசு தயாராக இருப்பதாகவும் -

தளபதி அபாஸ் கூறினார்.

சூடானிய அரசின் இந்த நடவடிக்கை, மேலும் பல அரபு நாடுகளை இஸ்ரேலுக்கு எதிராக அல்லது பலஸ்தீனருக்கு ஆதரவாக வெளிப்படையாகச் செயற்பட வைக்கும் என்று கருதப்படுகிறது. (ஒ)

# இந்தியாவுடன் போர் மூண்டால் அணுகுண்டு வீசித் தாக்குவோம்!

## பாக்.அதிபர் முஷாரப் எச்சரிக்கை

சிங்கப்பூர்சிற்றி,ஏப்.9

'இந்தியா எம்மீது தாக்குதல் நடத்தினால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்துவோம்!'

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்.

ஜேர்மனிய நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே முஷாரப் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் ஏற்பட்டு, நிலைமை மோசமாகினால் இந்தியாவுக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதைத் தவிர, பாகிஸ்தானுக்கு வேறு வழியில்லை என்றும் முஷாரப் கூறினார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார். (ஒ)

# கைலாசமலைக்குச் செல்லும் பாதை சீனாவால் திறப்பு!

காத்மண்டு,ஏப்.9

திபெத்தில் உள்ள கைலாசமலை, மானசரோவர் ஏரி ஆகிய புனிதத் தலங்களுக்குச் செல்வதற்கான வழிகளை சீனா திறந்துவிட்டுள்ளது.

இனி இந்தப் புனித ஸ்தலங்களுக்கு இந்து மற்றும் புத்த மத யாத்திரிகர்களும் ஏனையவர்களும் சென்றுவரமுடியும்.

நேபாள சுற்றுலாத்துறை அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் விளைவாக அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை ஆரம்பித்தது. இதனால் தீவிரவாதிகள் திபெத்துக்குள் நுழைந்துவிடாமல் இருப்பதற்காக சீனா இந்த இடங்களுக்குச் செல்லும் பாதையை மூடிவிட்டது. தற்போது அந்த அபாயம் நீங்கியுள்ளதை அடுத்து பாதை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியர் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த சுமார் 40 ஆயிரம் யாத்திரிகர்கள் இந்தப் பகுதிக்குச் சென்று வருகின்றனர். (ம)

# குவைத் யுவதி - இந்திய வாலிபர் காதல் இரு நாடுகளிலும் பெரும் பரபரப்பு!

குவைத் யுவதிக்கும் இந்திய வாலிபருக்கும் இடையிலான காதல் விவகாரம் இருநாடுகளிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது:-

குவைத்தை சேர்ந்தவர் தலால் ஆஸ்மி. இவரது தந்தைக்கு 3 மனைவிகள். இவர் பிறந்த மறுநாளே தாயும், சிறிது காலம் கழித்து தந்தையும் இறந்துவிட தந்தையின் மூத்த மனைவி இவரை வளர்த்தார். 10ஆம் வகுப்புடன் தலால் ஆஸ்மியின் படிப்பு நிறுத்தப்பட்டுவிட்டது. அதிலிருந்து பெரியதாயாரின் குடும்பத்தினரால் கொடுமைகளுக்கு ஆளான தலால் ஆஸ்மி வேதனையுடன் காலத்தை ஓட்டினார்.

இந்த நிலையில்தான் ஆந்திர மாநிலத்தில் இருந்து குவைத்துக்கு பணியாளாகச் சென்ற காதர் பாஷா 1998ஆம் ஆண்டு தலால் ஆஸ்மீயின் பெரியம்மா வீட்டில் வேலைக்குச் சேர்ந்தார்; காதர் பாஷாவின் அன்பும் ஆதரவும் தலால் ஆஸ்மியைக் கவர்ந்தன. ஆனாலும் மொழிகள் வெவ்வேறாக இருந்ததால் தலால் ஆஸ்மி தான் கொண்ட காதலை சைகையால் வெளிப்படுத்திய போதும் காதர் பாஷாவால் அதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆயினும் ஒருவாறு காதர் பாஷாவுக்கு ஆஸ்மியின் காதல் புரிந்த போதும், தனது நிலைமையும், குவைத்தில் உள்ள இஸ்லாமிய ஷரியத் சட்டங்களும் அச்சத்தை ஏற்படுத்தின. குவைத் நாட்டைச் சேராத ஒருவரை குவைத் பெண்கள் மணக்க முடியாது என்றும் -

காதலிக்கும் குவைத் யுவதி கல்லால் எறிந்து கொல்லப்படுவார் என்றும் -

பல்வேறு விதமான அச்சுறுத்தும் தகவல்களால் காதர் பாஷா அஞ்சினார்.

ஆனால் ஒருநாள் இரவு தலால் ஆஸ்மி தனது மணிக்கட்டை கத்தியால் வெட்டிக்கொண்டு தன்னைக் காதலிக்காவிட்டால் இறந்துவிடப் போவதாகக் கூறியபோது காதர் பாஷா ஆஸ்மியின் காதலை ஏற்றுக் கொண்டார்.

இறுதியாகக் காதலர்கள் இருவரும் இந்தியா சென்று அங்கு திருமணம் செய்துகொள்வது என்று தீர்மானித்தனர். ஆனாலும், திருமணம் ஆகாத குவைத் பெண் ஒருவர் பெற்றோருடன் மட்டுமே வெளிநாடு செல்ல முடியும் என்ற குவைத் சட்டத்தினால், தலால் ஆஸ்மி கடவுச் சீட்டு பெறமுடியாமல்போனது. செய்வதறியாது ஆஸ்மி திகைத்தபோது பத்திரிகை ஒன்றில் போலிக் கடவுச் சீட்டு பற்றிய செய்தி ஒன்றை அவர் படித்தார். அதனைப் பார்த்ததும், தமது வீட்டில் பணியாற்றிய இந்தியப் பணிப் பெண்ணான சென்னம்மாவின் கடவுச் சீட்டைத் திருடி வேறொருவரிடம் கொடுத்து தனது புகைப்படத்தை அதில் ஒட்டவைத்து போலிக் கடவுச் சீட்டு ஒன்றை உருவாக்கினார் தலால் ஆஸ்மி. அதனைப் பயன்படுத்தி காதர் பாஷாவுடன் இந்தியா வந்த, தலால் ஆஸ்மி இந்திய விமான நிலையத்தில் அதிகாரிகளிடம் போலி ஆவணத்துடன் பயணித்ததற்காக பிடிபட்டுள்ளார். அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, தற்போது வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடவுச்சீட்டுத் தொடர்பாகத் தான் செய்த தவறை மன்னித்து இந்தியாவில் தொடர்ந்து தான் தங்க அனுமதிக்குமாறு இந்திய மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் தலால் ஆஸ்மி.

இந்த விவகாரத்தின் பின்னர் ஆஸ்மி குவைத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் குவைத்தின் கடுமையான இஸ்லாமியச் சட்டங்கள் ஒரு புறமிருக்க தனது உறவினர்களே தன்னைக் கொன்று விடுவார்கள் என்று ஆஸ்மி அச்சம் வெளியிட்டுள்ளார்.

ஆஸ்மியின் காதல் விவகாரம் இந்தியப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகின்றது. இதனால் மக்கள் மத்தியில் இது தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் எழத் தொடங்கிவிட்டன. போதாக்குறைக்கு, தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், தி.மு.க.தலைவர் கருணாநிதியும் ஆஸ்மி மீது அனுதாபம் காட்டும்படி மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் போலி ஆவணங்களுடன் நாட்டுக்குள் நுழைந்த ஒருவரை எப்படி ஏற்பது என்று இந்தியக் குடிவரவு அதிகாரிகள் செய்வதறியாது திணறுகின்றனர்.

இது ஒரு புறமிருக்க, இந்தியாவுக்கான குவைத் தூதரகம், ஆஸ்மி மனநிலை சரியில்லாதவர் என்றும் -

அவரை குவைத்துக்கு திருப்பி அனுப்பவேண்டும் என்றும் -

இந்திய அரசிடம் கோரியுள்ளது.

ஆக மொத்தத்தில் இந்திய மக்களின் - குறிப்பாகத் தமிழகத்தின் - முடிவு காணவேண்டிய தலையாய பிரச்சினையாக உள்ளது. தலால் ஆஸ்மியின் காதல் விவகாரமே.(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# நெஞ்சினின்றகலா மூன்றாண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 | 13 |
| 12 | 04 |
| 1931 | 1999 |

## அமரர் ஏகாம்பரம் பேரின்பராசா

(முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் - இலங்கை மத்திய வங்கி தலைமைக் காரியாலயம், கணக்காய்வுப் பிரிவு)
திதி:- 09.04.2002 செவ்வாய்க்கிழமை

**விழி மூடிய உங்களை வழியனுப்பி வைத்து**
**ஆண்டு மூன்று ஓடி மறைந்தது**
**நீண்டு வாழ்ந்த நினைவுகள்**
**மீண்டும் மீண்டும் வருகுது.**
**நாங்கள் மூலைக்கொருவராய் இருந்தாலும்**
**உங்கள் நினைவு நாளிலின்று**
**விழிகளெல்லாம் நனைகின்றன.**
**தீராது நம்துயர் உங்கள் இழப்பு மிகக் கொடியது.**
**உங்கள் நினைவுகளே எங்களை இங்கு ஆளுது அப்பா.**

உங்கள் நினைவால் கலங்கித் தவிக்கும்;
மனைவி,
மகள் } அமுதமலர் - சிவலிங்கம் (கனடா),
சுகந்தமலர் - கலைச்செல்வன் (லண்டன்),
பேரப்பிள்ளைகள் } சுகிர்தர், ஜனனி } (கனடா).

*பத்திரகாளி கோவிலடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(2485)

# ஆறாத்துயரில் ஆண்டு ஒன்று



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 21 |
| 06 | 03 |
| 1980 | 2001 |

## செல்வன் செல்வரட்ணம் சுதர்சன்


திதி: 09.04.2002

**ஆண்டொன்று ஆனாலும் எமை விட்டுப் பறந்த பட்டுக் கிளியே!**
**மீண்டும் உன் உருவத்தை மேதினியில் எப்போ காண்போம்!**
**பஞ்சத்தைப் போக்கவென்று பயணித்த நீ**
**உமது பஞ்சத்தில் எமை ஆழ்த்திச் சென்றதேனோ!**
**ஓடி வந்திடு நிம்மதியைத் தந்திடு.**

*பிரிவால் துயருறும்:*
அப்பா - அம்மா,
சகோதரர்கள்: உமா, சர்மி, சுசி, நிது,
அம்மப்பா-அம்மம்மா,
மாமாமார் - மாமிமார்,
மைத்துனர் - மைத்துனி.

*"சுதன் அகம்"*
*விக்னேஸ்வரா வீதி,*
*நிற்சாமம்,*
*சங்கானை.*
(2508)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 21 |
| 09 | 03 |
| 1918 | 2001 |

## அமரர் முத்தையா நடராஜா

*(உரிமையாளர் - யோய்ஸ் பார்மசி, பண்டத்தரிப்பு)*
திதி: 09.04.2002

**எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே!**
**எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்**
**எம்முடன் வாழ்ந்த உங்கள் நினைவுகள்**
**என்றென்றும் எமைவிட்டு மறையவே மறையாது.....!**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் இன்று *(09. 04. 2002)* செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

*210, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(2575)

# பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

அச்சுவேலி,ஏப்.9

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மூன்றுதினங்கள் நடைபெறும்.

நாளை புதன்கிழமை இரசாயனவியல், புவியியல் ஆகிய பாடங்களுக்கும் 11ஆம் திகதி வியாழக்கிழமை இணைந்த கணிதம், அளவையியலும் விஞ்ஞானமும், பௌதிகவியல், தமிழ் ஆகிய பாடங்களுக்கும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரசாயனவியல், பொருளியல், உயிரியல், கணக்கியல் ஆகிய பாடங்களுக்கும் வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

(க-11)

# கொழும்பு மருத்துவக்குழு நயினாதீவுக்கு

நெடுந்தீவு,ஏப்.9

கொழும்பில் இருந்து இங்கு வந்த மருத்துவக் குழுவினர் நேற்றுமுன்தினம் நயினாதீவிலும் ஊர்காவற்றுறையிலும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

வேலணை பிரதேச செயலர் எஸ். இரத்தினம் மருத்துவக் குழுவினரை நயினாதீவுக்கு அழைத்துச்சென்றார்.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் மருத்துவச் சிகிச்சைகள் நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் இதில் கலந்துகொண்டு ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றனர்.

(க-111)

# பிற்போடப்பட்டுள்ளது




**எதிர்வரும் (14.04.2002) ஞாயிற்றுக்கிழமை எம்மால் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த மேற்படி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வரும் 26.05.2002 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.**

**கரணவாய் வடக்கு,**
**வல்வெட்டித்துறை.**

ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான
அறங்காவலர் சபையினர்.(2621)

# நன்றியுடன் நினைவு கூருகின்றோம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 09 |
| 06 | 04 |
| 1918 | 1990 |

அமரர்

## உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா

**(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)**

**மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்.** (எபே. 6:8)

*மானிப்பாய்* (2656) வண.ஜெயக்குமாரின் அன்னப்பா.


**Canadian College of Business & Computers**



An Opportunity to
**PROSPER**
in Information Technology

*An urban location that's trendy, upscale and very cool. An opportunity to get technically in-tune with some of the hottest state-of-the-art technology in the country. At the Canadian College of Business & Computers, we're offering you the opportunity to own the future in Information Technology. Programs run all year long. Classes in English and language support included.*

Ready for the challenge? Welcome to Canada for your studies.

**Canadian College of Business & Computers**
**130 Bloor St. West, Suite 901, Toronto, Ontario, M5S 1N5**

Contact Persons: **Meena & Violeta**
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: **1·416·413·1234**
fax: **1·416·413·0314**
e-mail: **admin@ccbc.ca**

**WWW.CCBC.CA**

Call During **8:00pm - 5:00am** Sri Lanka Time

(C/21488)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09 - 01 - 1910

விண்ணில் 09 - 04 - 1998


### திருமதி சிதம்பரம் நாகமுத்து

நாகமுத்து நாயகனின் மனங்காத்து நீ பெற்ற
நவமணிகள் தம்மைக் காத்துச்
சீர்குன்றா வாழ்வு கண்ட சிகரமே
சிதம்பரத்தினின்றிறங்கிப்
பாருக்கு மீண்டு வந்து பரிதவிக்கும்
மக்களுக்குள் மழலை ஆக
நாலாண்டுகள் ஏனோ! நயமுடனே செலுத்துகின்றோம்
அஞ்சலிகள்!!!

மக்கள், மருமக்கள், பேரர்.
'சிதம்பரம்'
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

*தகவல்:-*
*செல்வி நா.செல்லம்மா,*
*நிர்வாக உத்தியோகத்தர்,*
*வலயக்கல்வி அலுவலகம்,வடமராட்சி, புலோலி.* (2620)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 16 - 05 - 1921

இறப்பு 01 - 04 - 2000

### அமரர் சின்னத்தம்பி பொன்னையா

திதி:-09.04.2002

ஆண்டு இரண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்.

*உமது ஆத்மா சாந்தியடைய புலோப்பளை அறத்தி அம்பாளை வேண்டுகின்றோம்.*

என்றும் தங்கள்நினைவுடன்
பரமசாமி குடும்பம் (மகன்),
சகோதரர் குடும்பம்.

*புலோப்பளை,*
*பளை.* (2503)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளை முகாமையாளர்
**திருமதி பத்மலோஜினி ரகு அவர்களின் அன்புத் தாயாரும்,**
மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை எமது முகாமையாளர்
**திரு.துரைசிங்கம் ரகு அவர்களின் அருமை மாமியாருமாகிய**

### திருமதி மணி சிவசுப்பிரமணியம்

அவர்கள் காலமானதையிட்டு துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொளகின்றோம்.

**மிலேனியம் றெஸ்ரோறன்ற்**
**உரிமையாளர்**

(2662)

## மூன்றாம் ஆண்டு நினைவினில்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் (யோ. 11:25)



மண்ணில் 1993 - 05 - 23

விண்ணில் 1999 - 04 - 09

### செல்வி ம.வினோறொபினா (வினோ)

(தரம் 1 மாணவி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

பாசத்தின் சுமையோடு வாழ்ந்தாய்
பண்பினில் உயர்ந்து நின்றாய்
நோயும் உன்னை சூழ்ந்து கொள்ள
மருத்துவத்தை நம்பினோம்...
மருந்தும் விஷமானதேன்...?

(2666)

தற்காலிக முகவரி:
*செல்லாச்சி அம்மையார் வீதி,*
*சுன்னாகம்.*

என்றும் உன் நினைவினில்
குடும்பத்தினர்
பங்களா வீதி, மீசாலை.

# அமைச்சர்களின் யாழ்.வருகை குறித்து ஆனந்தசங்கரிக்கு புரியாதிருப்பது ஏன்?

## யாழ்.செயலகத்தில் அமைச்சர் மகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,ஏப்.9

அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வருவது தொடர்பாக ஆனந்தசங்கரி தவறாக விமர்சிப்பது ஏன்? என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

யாழ்.செயலகத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

அமைச்சர்கள் சுற்றுலா நோக்கிலும் விடுமுறையைக் களிப்பதற்காகவும் யாழ்ப்பாணம் வரவில்லை. ஒவ்வொருதுறை அமைச்சர்களும் வட பகுதியின் அபிவிருத்தி கருதியே இங்கு வந்து போகின்றனர். ஆனந்தசங்கரி நினைப்பது போல உடனடியாக எல்லா வேலைத்திட்டங்களையும் பூர்த்திசெய்ய முடியாது.

அமைச்சர்களது வருகையை ஆனந்தசங்கரி தவறாகப் புரியக் கூடாது. அவர்கள் எமது பிரதேச அபிவிருத்தி கருதியே இங்கு வந்து போகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண வருகையின் பின், அமைச்சர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் சென்று அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடவேண்டும், அபிவிருத்திப் பணிகள் தொடர்பான அறிக்கைகள் எழுத்துவடிவில் சமர்ப்பிக்க வேண்டுமென பிரதமர் பணித்துள்ளார். அதற்காகவே அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்துபோகின்றனர்.

பிரதமர் ரணிலின் விசேட உத்தரவின்பேரில் வடக்கில் பெரியதொரு கலாசார மண்டபம் அமைக்க 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்குரிய கட்டடம் நிர்மாணிக்க காணி வசதி இல்லை.

யாழ்.செயலகம், உயர் தொழில்நுட்ப நிறுவனம், பனை அபிவிருத்தி சபை, இந்து சமய விவகாரங்கள் அமைச்சு கட்டடம் என்பன அமைக்க காணி வசதி இல்லாமல் இருக்கிறது. இது தொடர்பாக காணி அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-5)

## ஆங்கில பாட செயலமர்வு

பருத்தித்துறை,ஏப்.9

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 4இல் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் வட.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (க-7-118)

## காரைநகரில் இலவச வகுப்பு

காரைநகர்,ஏப்.9

காரைநகர் மத்தி கல்வி வளர்ச்சிக்கழகத்தினால் மாலைநேர இலவச வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காரை. மத்தி அம்பாள் கடற்தொழிலாளர் சங்கத்தின் அனுசரணையுடன் காரைநகர் மத்தியில் உள்ள மாணவர்களின் நலன் கருதி இலவச மாலை நேர வகுப்புக்கள் கடந்த வாரம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

இந்த வகுப்புக்களில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது கல்வி பயின்று வருவதாகவும் அவர் சொன்னார். (க-73)

## மெய்வன்மைப் போட்டிகள்

நெடுந்தீவு,ஏப்.9

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் திருமதி செ.பழனி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வேலணை கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.தில்லைநாதன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலர் எஸ்.இரத்தினம், உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.தெட்சணாமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்வர். (க-7-111)

★ ★ ★

காரைநகர்,ஏப்.9

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.சிவகுருநாதன் பிரதம விருந்தினராகவும், ஜி.ரி.இசற். நிறுவன கணக்காளர் பேர்சி.ஜெயக்குமார், கல்லூரியின் இளைப்பாறிய [illegible] ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (க-73)

## எரிகாயத்துக்கு இலக்கானவர் மரணமானார்!

யாழ்ப்பாணம், ஏப்.9

குப்பி விளக்கு தட்டுப்பட்டு தீக்காயத்துக்கு உள்ளாகி கடந்த புதன்கிழமை யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் நேற்றுமுன் தினம் மரணமானார்.

சங்கானை வல்லை வீதியைச் சேர்ந்த எஸ்.சுகுணகுமார் (வயது - 33) என்பவரே மரணமானவர் ஆவார்.

இவரின் முதுகுப்பகுதியும், மார்புப் பகுதியும் பலத்த எரிகாயங்களுக்கு இலக்காகி இருந்தன. (க-12)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
பதிவு இலக்கமும் திகதியும் ஜே/1639 - 12.05.1976

### முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர் பட்டியல்கள் 2002.04.10ஆம் திகதியிலிருந்து கிளைகளிலும், அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் 10 நாள்களுக்குக் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும். இவ்வாக்காளர் பட்டியல் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் உறுப்பினர்கள் 30.04.2002ஆம் திகதிக்கு முன் மேற்படி சங்கப் பணிமனைக்கு எழுத்துமூலம் கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கவோ, வாக்களிக்கவோ உரிமை பெற்றவர்களாவர். (முழுத் தகைமை பெற்ற உறுப்பினர் என்பது உறுப்பினர்களாகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தவரும், ஒரு முழுப்பங்கு ரூபா 100/=ஐச் செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்)

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதி, இடம் மற்றும் நிகழ்ச்சிநிரல் என்பன தொடர்பான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

05.04.2002. (சி-21527) - செயலாளர்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு 14 - 05 - 1940

உதிர்வு 21 - 03 - 2001

### அமரர் இளையவி கந்தசாமி

திதி: 09-04-2002

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை
எமது நெஞ்சம்
மீண்டும் உங்கள் உருவத்தை
மேதினியில் எப்போது காண்போம்?
நாம் அன்போடு நினைந்து
ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி!*

தற்காலிக முகவரி:
*"துவாரகை"*
*சுழாவடி, ஆனைக்கோட்டை.*
நிரந்தர முகவரி:
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(2660)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் செல்வராசா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் பலாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் செல்வராசா கடந்த (24-03-2002) ஞாயிற்றுக் கிழமை தெட்சணாமடுவில் காலமானார்.

அன்னார் பலாலி புனித செபஸ்தியார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்வராசாவின் (புகையிரதப் பகுதி ஊழியர்) அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (25.03.2002) திங்கட்கிழமை தெட்சணாமடுவில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்.அரிசி ஆலை முன்பாக,
இணுவில் றோட்,
மானிப்பாய்.

தகவல்:
**பிள்ளைகள்**

(2669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் கலாசாரங்கள் பேணப்பட்டு வருவதற்கு யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியமே காரணம்

## கௌரவிப்பு விழாவில் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஏப்.9

தமிழ்மக்களின் கலாசாரங்கள், பண்பாடுகள் வளர்ச்சியடைந்து, அது இன்றுவரை பேணப்பட்டு வருவதற்கு யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியமே காரணமாக இருக்கின்றது.

- இவ்வாறு மூத்த புவியியலாளரும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளைக்கு புவியியல் சமூகத்தினரால் வழங்கப்பட்ட கௌரவிப்பு விழாவில் பேசிய கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எம்.எஸ்.மூக்கையா கூறினார்.

யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் துணைவேந்தர் மூக்கையா மேலும் பேசும்போது கூறியதாவது:-

எனது ஆசானுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று ஏங்கிக் கொண்டிருந்தபோது இப்படியான நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்ற வாய்ப்புக் கிடைத்தது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. யாழ்ப்பாண மக்களின் கல்விப்பாரம்பரியம் தொடர்ந்தும் பேணப்படுவதற்கு இங்குள்ள கல்விமான்கள் தம்மாலான உயர்ந்த பங்களிப்பை வழங்கவேண்டும்

பல்கலைக்கழகத்தையும் சமூகத்தையும் இறுக்கமாக இணைத்து வைத்த பெருமை துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளையையே சாரும்.

கல்வி என்பது வெறுமனே சான்றிதழுடன் முடிந்துவிடும் விடயமல்ல. மனிதன் தான் சிந்திப்பவற்றையெல்லாம் சிறந்தமுறையில் வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இன்று பட்டம் பெற்றவர்களில் பலருக்கே தமிழில் ஒரு விடயத்தை இலக்கணப் பிழைகள், பொருள் பிழைகள் இல்லாமல் எழுதத் தெரியாத நிலைமை இருக்கின்றது.

அனைவருக்கும் மொழிவளம் மிகவும் அத்தியாவசியமானது. மாணவர்களுக்கு உரியமுறையில் இதனைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் தமது பகுதிகள் சின்னாபின்னமடைந்துள்ள நிலையிலும் தமது கல்விப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். இதில் முக்கியமான பணியை துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை மேற்கொண்டமை மறுக்கமுடியாதது.

இலங்கையில் அரசியல் தலைவர்கள் எழுத்தறிவு என்ற குறிகாட்டியை வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்றுகின்றார்கள். எழுத்தறிவு எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது? ஜப்பானியர்கள் எழுத்தறிவுக்கு மேலாகக் கல்வி தொழில்நுட்பத் துறைகளில் முன்னணி வகிக்கிறார்கள். நாமும் அனைவருக்கும் கல்வி தொழில்நுட்பம் என்ற நிலைக்கு மாற வேண்டும். இது சமூகத்திற்குத் தேவையானது.

இலங்கைத் தமிழ்மக்களின் புவியியல் பாரம்பரியத்தின் பிதா பேராசிரியர் செல்வநாயகம். அவரது பல திறமைகளையும் மனித உறவுகளையும் பெற்ற தமிழினத்தின் ஒரு முழுமையான மனிதனாக - யாழ்.பல்கலைக்கழகத்தின் நல்வழிகாட்டியாக - ஒரு மூத்த புவியியலாளர் என்பதற்கு அப்பால் சமூகத்தில் அவர் மேற்கொண்டுவரும் பணி நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியது - என்றார்.

### பேராசிரியர் புவனராஜன்

கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் பொ.புவனராஜன் பேசும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் புவியியல் துறை மிகவும் சிறப்பாக உள்ளது. பேராதனையில் மத்தும பண்டார, கிழக்கில் மூக்கையா, யாழ்ப்பாணத்தில் பாலசுந்தரம்பிள்ளை இவர்கள் புவியியலாளர் என்றவகையில் தலைமைத்துவத்திற்கும், புவியியல் துறைக்கும் ஏதோ ஒருவகையில் தொடர்பு இருக்கின்றதுபோல் உள்ளது. இளைப்பாறிய பின்னருங்கூட இந்த மண்ணின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் முன்னேற்றமான நடவடிக்கைகளுக்கு அவர் கை கொடுக்க வேண்டும் - என்றார்.

துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தமது பதில் உரையில்:-

தேசிய, பிரதேச, கிராமிய மட்டத்தில் புவியியலாளர்களுக்கு நிறையவே பணிகள் காத்திருக் கின்றன. இவற்றின் வளர்ச்சிக்காக புதிய திட்டங்களை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் வேண்டிய பொறுப்புக்கள் இவர்களைக் கூடுதலாகச் சார்ந்துள்ளது.

இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டதுபோன்று புவியியலாளர்கள் ஒரு தாபனத்தை அமைத்து அதனூடாக பல்வேறு பணிகளைச் செய்யலாம். எனது ஆசிரியர்களை நான் என்றும் மதித்து வருபவன். ஆசிரியர்கள் சமூகத்தை மதித்துநடத்தல் வேண்டும். எனது பணிகளுக்கெல்லாம் உடனிருந்து ஒத்துழைத்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர், பேராசிரியர் அ.சண்முகதாஸ், குருமுதல்வர் எஸ்.பி.நேசகுமார், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ.ஸ்ரீகுமரன், எஸ்.குணபாலசிங்கம் உட்பட பலர் பேசினார்கள். புவியியலாளர்களால் வழங்கப்பட்ட விருதை துணைவேந்தர் மூக்கையா, துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளையிடம் கையளித்தார். அன்பர்கள் ஆதரவாளர்கள் பொன்னாடை போர்த்து மலர்மாலை அணிவித்துக் கௌரவித்தனர்.

முன்னதாக யாழ்.இந்துக் கல்லூரி, இந்து ஆரம்ப பாடசாலைகளில் உள்ள ஆராதனை மண்டபங்களில் இருந்து 'பான்ட்' வாத்தியத்துடன் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தம்பதியினர் ஊர்வலமாக விழா மணடபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

(க-111-4)

# சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் மிகத்தெளிவாகச் செயற்படுகின்றனர் புலிகள்

## மன்னார் அரசியல் பணிமனை திறப்பு விழாவில் ஐங்கரன்

மன்னார்,ஏப்.9

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் 100 சதவீதம் தெளிவாக உள்ளனர்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் ஐங்கரன் கூறினார்.

கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

புனித சவேரியார் பெண்கள் தேசியப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி பாஸ்கா, மாவீரன் லெப்டினன்ட் கேணல் விக்ரரின் சகோதரர், மாவீரன் லெப்டினன்ட் நிதியின் தாயார், மாவீரன் கப்டன் வைத்தியின் தாயார், வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை யேசுராசா அடிகளார் ஆகியோர் ஆரம்பத்தில் மங்களவிளக்கேற்றினர்.

மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமிர்தாஸ் புலிக்கொடியை ஏற்றி வைத்தார்.

மடிந்த மாவீரர்களுக்கும் மக்களுக்குமாக அனுஷ்டிக்கப்பட்ட இரண்டு நிமிட அகவணக்கத்தைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட வண.பிதா தேவராசா அடிகளாரால் பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.நீக்களாஸ் பிள்ளை நாடாவை வெட்டி செயலகத்தைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஐங்கரன் பேசியதாவது:-

"புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான செயற்பாடுகள் தலைவர் வே.பிரபாகரனின் கட்டளைக்கிணங்க இதயசுத்தியுடன் கடைப்பிடிக்கப்படும்.

"விடுதலைப் புலிகள் சிறப்பான பலத்தோடு இருந்துகொண்டு தான் பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கின்றார்கள்" இவ்வாறு அவர் கூறினார்.

தேவராசா அடிகளார் உரையாற்றுகையில் -

"சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் பிரசன்னமாகியிருப்பது மகிழ்ச்சியானதாகும். இதனை இலங்கை அரசு நல்லமுறையில் அணுக வேண்டும்" - என்றார்.

"நாட்டின் அனைத்து மக்களும் சமாதானத்தை ஆசிக்கின்றனர். இந்தச் சமாதான முயற்சிகளின் முனனெடுப்பின்மூலம் தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வு நிலைபெறவேண்டும்" என்று வாழ்த்தினார் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

பௌத்த தேரர் வணகளுடிஹானபய ரத்தின தேரர் உரையாற்றுகையில்-

"தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பெற உரித்துடையர்வகள். வடக்கு - கிழக்கில் அரசியல் [illegible] நிறைவேற்ற உரிமையுடையவர்கள்" என்று உறுதிபடக் கூறினார்.

(க)

## இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவகத்தின்

# முழுநேரப் பயிற்சி நெறிக்கு புதிய மாணவர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

இலங்கை - ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவகத்தினால் மொறட்டுவவில் நடத்தப்படவுள்ள தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2002-10-31 ஆம் திகதியன்று 16வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்த பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

மோட்டார் இயந்திரவியல், வார்ப்பியல், குளிரூட்டல், மின்சக்தியியல், இயந்திரவியல், டீசல் இயந்திரவியல், வாகன மின்சாரவியல், ஒட்டுவேலை ஆகிய பயிற்சிகளுக்கே மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறி தொடர்பான மேலதிக விவரங்கள் ஏப்ரல் 5ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன.

இந்த வர்த்தமானியின் பிரதியை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

இதேவேளை -

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான விவரங்கள் அடங்கிய வர்த்தமானியையும் அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் பார்வையிடலாம்.

(க-7)

## கல்விச்சாலைக் காட்சிகள்



சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை தற்காலிகமாக இயங்கிய சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் இடம்பெற்ற நன்றி பாராட்டும் நிகழ்வில் வித்தியாலய அதிபர் வ.கயிலேஸ்வரன் உரையாற்றுகிறார். அருகில் சதா பொன்ஸ் நிறுவன இயக்குநர் மு.சுந்தரலிங்கம் மற்றும் கல்வி அதிகாரிகள் அமர்ந்துள்ளனர். (7)



அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் எஸ். குணேந்திரன், கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் மற்றும் விருந்தினர்கள், ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (7)



நெடுந்தீவு மேற்கு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நெடுந்தீவுக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணத்தின் பாரியார் திருமதி ப.அரசரட்ணம் மாணவன் ஒருவனுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன், நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி அதிபர் அருட்செல்வி ஜெயசீலி றொட்றிக்கோ, நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை எழுதுவினைஞர் க.அறிவரசன் ஆகியோர் காணப்படுகின்றனர். (7-111)



அச்சுவேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கான சுகாதார வாரத்தின் போஷாக்கு தின நிகழ்வுகள் அண்மையில் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற புனித திரேசாள் மகளிர் கல்லூரி மாணவர்களின் "தாய்ப்பாலின் போசணை" என்ற நாடகத்தின் ஒரு காட்சியை படத்தில் காணலாம். (7-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க பொதுக்கூட்டம்

இடம்: புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
காலம்: இன்று (09.04.2002)
செவ்வாய்க்கிழமை 8.00a.m.
விடயம்: மீள் பதிவும், தொழில் அமைச்சின் விண்ணப்பப் படிவமும் வழங்கப்படும்.

* அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர். (2687) செயலாளர்.

---

## நாவலி

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**OL** DAY CLASS

**ஆரம்பம் - 10.04.2002 புதன் 8.30 மணி**

எமது தனித்துவமான ஆசிரயர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை

**தரம் 1 முதல் O/L வரை**

*2ஆம் தவணைக்கான வகுப்புகள் 10. 04. 2002 புதன்கிழமை ஆரம்பமாகின்றன.*

*☆ இன்னும் சொற்ப அனுமதிகள் உண்டு.* (2684)

---

## இலங்கை மின்சார சபை-யாழ். பிரதேச அலுவலகம்
## மின் பாவனையாளர்களுக்கான
# அறிவித்தல்

யாழ். குடாநாட்டிற்கு 20 மெகாவாட் மின்சாரம் தேவை. இலங்கை மின்சார சபைக்கு மின்சாரம் வழங்கும் கூல் ஏயார் நிறுவனம் 18 மெகாவாட் மின்சாரம் வழங்க ஒப்புக்கொண்டிருந்தது. ஆனால் தற்போது அவர்களது சில ஜெனரேட்டர்கள் பழுதடைந்துள்ளமையால் பகல் 04 மெகாவாட் மின்சாரமும் இரவு 05 மெகாவாட் மின்சாரமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கமுடியும் என அறியத்தந்துள்ளார்கள். இந்நிலையில் மறு அறிவித்தல் வரை இலங்கை மின்சாரசபை இந்த மின்சாரத்தை சுழற்சி முறையில் மூன்று நாள்களுக்கு ஒரு தடவை வழங்கும் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகிறேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
*இலங்கை மின்சாரசபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*

சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்
"இலங்கை மின்சார சபை"
(C/21560)

---

## இதயம் கனிந்த நன்றிகள்



## யூரிசன் ஜெனராஜ் சுதர்ஷினி

(புதுமணத் தம்பதிகள்)

கடந்த (07.04.2002) இல் யாழ். பெருமாள் கோயில் ஸ்ரீலக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற எமது திருமண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெற்ற வரவேற்பு உபசார நிகழ்விலும் கலந்துகொண்டு ஆசீர்வதித்து, வாழ்த்தி பரிசில்கள் வழங்கிய அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிதது்க் கொள்கின்றோம்.

*சித்திராலயம்,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.* (2682)

*பிரியமுடன்:*
*திரு.தே.யூரிசன் ஜெனராஜ்,*
*திருமதி யூ.சுதர்ஷினி.*

---

உ
ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விஷு வருடம் பங்குனித் திங்கள் 27ஆம் நாள் (10.04.2002) புதன்கிழமை முற்பகல் மணி 10.15 முதல் 11.45வரை (ப.நே.) வரும் மிதுன லக்கினமும் பூரட்டாதி நட்சத்திரம் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபயோகவேளையில்

| எங்கள் புதல்வன் | எங்கள் புதல்வி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **புஸ்பராஜா** | **கல்யாணி** |

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருளால் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் த்ங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

அழகரட்ணம் குடும்பம்
19/7, கலைப் புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

பொ.சுப்பிரமணியம் குடும்பம்
(பெரிய பாலு)
1032, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**இரு வீட்டார் அழைப்பு**
**(இவ்வழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)**

(2658)

---

# யாழ்ப்பாணத்தில் சக்திதரும் சித்திரை விழா

## யாழ். மக்களுக்கான போட்டிகள்

சக்தி Shakthi TV FM

1. **மரதன் ஓட்டம்** - Marathan Race 15 Km
(வீதி ஓட்டம்) (Road Race)
(ஆண்கள்)
பிரிவு I - 20 வயதிற்குட்பட்டோர் (பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட)
பிரிவு II - 20வயதிற்கு மேற்பட்டோர்

| | | |
|---|---|---|
| பரிசுகள் : | முதலாம் இடம் | : 10,000/- |
| | 2ஆம் இடம் | : 7,000/- |
| | 3ஆம் இடம் | : 5,000/- |
| | 4 - 10ஆம் இடம் | : பணப்பரிசு |

அ. வயதெல்லையை நிரூபிப்பதற்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது தேசிய/அஞ்சல் அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும்.
ஆ. இப்போட்டியில் கலந்துகொள்வோர் 10.04.2002 அன்று புதன்கிழமை காலை 10.00மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு வந்து பதிவுசெய்த இலக்கங்களைப் பெற்றுக்கொள்ளவும்.



2. **சைக்கிள் ஓட்டப்போட்டி** (Shandard சாதாரணம்) திகதி: 12.04.2002
ஆண்கள் - 60Km
பெண்கள் - 30Km

| | | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| பரிசுகள் | 1ஆம் பரிசு | 20,000/- | 15,000/- |
| | 2ஆம் பரிசு | 15,000/- | 10,000/- |
| | 3ஆம் பரிசு | 10,000/- | 5,000/- |
| | 4 - 10 | பணப்பரிசுகள் உண்டு | |



அ. விண்ணப்பித்தவர்களுக்கான கூட்டம் 11.04.2002 பிற்பகல் 2மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும். அடையாள அட்டையை சமர்ப்பித்து போட்டி இலக்கங்களை பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: அ. விண்ணப்பங்களை 04-04-2002 உதயனில் குறிப்பிட்ட பிரகாரம் தயாரித்து உதயன் பணிமனையில் அதற்காக அமைக்கப்பட்டிருக்கும் கரும பீடத்தில் 10-04-2002 10.00மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். பிரத்தியேக விண்ணப்பப்படிவங்களை கருமபீடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. ஓடும் பாதை பற்றிய வரைபடங்கள் விரைவில் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.

'சக்தி மிக்கவர்களின் திறமையை வெளிக்கொணரும் சக்தி

சக்தி FM - யாழ்ப்பாணம் 91.5
கொழும்பு 105.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புத்தூக்கம் தரும் புலிகளின் வருகை

கிளிநொச்சியிலிருந்து முகமாலை ஊடாக யாழ்.குடாநாட்டுக்கான தரைப்பாதை திறக்கப்பட்டிருக்கின்றது. மிகுந்த இழுபறிக்கு மத்தியில் இது நிறைவேறியுள்ளது.

என்றாலும் இந்தப் பாதை ஊடாகப் பயணிகள் பஸ் போக்குவரத்து நடைபெறுமா என்பது இன்னும் உறுதியாகவில்லை. அது தொடர்பாக அரசுத் தரப்புக்கும் விடுதலைப் புலிகள் தரப்புக்கும் இடையில் தொடர்ந்து பேச்சு நடைபெற்றுவருவதாகவும் இரு தரப்புக்கும் இடையில் இணக்கமான ஒரு நிலையை ஏற்படுத்த நோர்வேயின் ஏற்பாட்டிலான யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீவிர பேச்சு நடத்திவருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இப்போதைய நிலையில் தனியாரின் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றின் போக்குவரத்துக்குத் தாராள அனுமதி கிடைக்கும். பயணிகளின் பஸ் போக்குவரத்தில்தான் சிக்கல்.

இந்தளவுக்குப் பாதை திறப்பு விவகாரத்தை முன்னகர்த்துவதற்கே நோர்வேத் தரப்பும் கண்காணிப்புக்குழுவினரும் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

பாதை திட்டமிட்டபடி 8ஆம் திகதி திறக்கும் என்று எதிர்பார்த்து கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்றுமுன்தினம் (7ஆம் திகதி) மாலைவரை கிளிநொச்சியில் தயாராகக் காத்திருந்தார். ஆனால் அரசுத் தரப்பில் பச்சைக்கொடி காட்டப்படவில்லை.

அதனால் 7ஆம் திகதி மாலை கிளிநொச்சியில் இருந்து விசேட ஹெலியில் கொழும்புக்குப் பறந்தார். பிரதமர் ரணிலைச் சந்தித்து அழுத்தம் கொடுத்தார். நள்ளிரவு வாக்கில் அனுமதி கிடைத்தது. காலையில் மீண்டும் கிளிநொச்சிக்குப் பறந்து வந்தார்.

அதன்பின்னரும் பெரும் இழுபறி நடந்தது. பிற்பகல் ஒரு மணியளவில்தான் பாதையைத் திறக்க முடிந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைய குடாநாட்டில் அரசியல் பணிக்கு வருவதற்கு அனுமதி பெற்ற 15 போராளிகள், சில தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதகுரு மார், தென்பகுதிப் பத்திரிகையாளர் என குறிப்பிட்ட சிலரே புலிகளின் பிரதேசத்திலிருந்து இப்பாதையூடாக குடாநாட்டுக்கு வர அனுமதிக்கப்பட்டனர்.

'புலிகளின் குரல்' ,'ஈழநாதம்' போன்ற வன்னிச் செய்தி ஊடகங்களின் பிரதிநிதிகள் கூட கடும் இழுபறிக்குப் பின்னரே குடாநாட்டுக்குள் வர அனுமதிக்கப்பட்டனர்.

இப்படி பாதை திறப்பில் இழுபறி இருந்தபோதும் அது மறுபுறத்தில் இப்பாதை ஊடாக வருகைதந்த விடுதலைப் புலிகளை வரவேற்க உரிமையோடு குடாநாட்டு மக்கள் திரண்டு வந்தமை மக்களின் உணர்வை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்ட வழிசமைத்தது என்பதையும் நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

குடாநாட்டு மக்கள் - தமது வழமையான பணிகளை நிறுத்திவிட்டு தங்களின் உணர்வும் உயிருமாய்க் கலந்துவிட்ட போராளிகளை வரவேற்கக் கொடிகாமத்துக்கு அப்பால் திரண்ட காட்சி தென்பகுதிப் பத்திரிகையாளர்களையே வியப்பில் ஆழ்த்தியது.

புலிகளின் குடாநாட்டு வருகை மக்கள் மத்தியில் அரசியல் ரீதியாக ஒரு புத்தூக்கத்தைத் தந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

சமாதானச் சூழலில் ஒரு புதிய அரசியல் கலாசாரம் மிளிர புலிகளின் வருகையும் அவர்களை வரவேற்ற குடாநாட்டு மக்களின் எழுச்சியும் உதவவேண்டும்.

## வேம்பிராய், மந்துவில் பகுதிகளில் மீளக் குடியமர அனுமதி கிடைக்குமா?

### மக்கள் துயரங்களுடன் வாழும் நிலை

தென்மராட்சி,ஏப்.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வேம்பிராய், தாவளை இயற்றாலை, மந்துவில் கிழக்கு, வரணி இயற்றாலை, மந்துவில் வடக்கு, மசாலை வடக்கு, மந்துவில் மேற்கு ஆகிய ஏழு கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர இன்னமும் அனுமதி மறுக்கப்பட்டு வருவதால் -

இப்பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 800 குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர முடியாமல் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் பெரும் சிரமங்களின் மத்தியில் வசித்து வருகின்றனர்.

இப்பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதிகளான வரணி-வேம்பிராய் வீதி, மீசாலை புத்தூர் சந்தி, கனகன்புளியடி வீதி ஆகியவை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படாமல் உள்ளதால் பொதுமக்கள் தமது இருப்பிடங்களைப் பார்வையிடக்கூட முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இப் பகுதிகளில் நான்கு பாடசாலைகள், உப அஞ்சல் அலுவலகம், 9 இந்து ஆலயங்கள், 5 சனசமூக நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், 3 பாலர் பாடசாலைகள், 3 ப.நோ.கூ. சங்கக்கிளைக் கடைகள் ஆகியவை உள்ளன என்றும் அத்துடன் 800 ஹெக்டர் நெல்வயல்களும், 300 ஏக்கர் மேட்டுநிலப் பயிர் செய்கைக் காணிகளும் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. இப்பகுதிகளில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு மகஜர்கள் அனுப்பியும் இதுவரை பயன் கிடைக்கவில்லை என்றும் பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. (க-117)

## நாட்டு நடப்பு

### அவனியில் தமிழர் மாண்பு!

ஆயிரம் மொழிகள் சாதி
அவனியில் இருந்த போதும்
தாயிவள் என் தமிழுக் கீடாய்
தரணியில் மொழி தானுண்டோ?
ஈராயிரம் ஆண்டு முன்பே
இருந்ததோர் தமிழ்ப் புலவன்
பாயிரத்தினோ பகன்று விட்ட
பக்குவக் குறளுக் கீடாய்
போயிந்த உலகில் சொல்ல
பிறிதொரு கவிஞன் உண்டோ?
மாயிரு ஞாலம் போற்றும்
மாண்படா தமிழன் மாண்பு.

*- விகடகவி.*

### அடுத்த மாத முற்பகுதியில் 3 தினங்கள்

## யாழ்ப்பாணத்தில் சைவ மாநாடு; இந்திய அறிஞர்களும் வருகின்றனர்!

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ். இந்து சமயப் பேரவையின ஏற்பாட்டில் அடுத்தமாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் சைவ மாநாடு நடத்தப்படவுள்ளது.

சைவசமயத் தத்துவங்கள், ஆலயக் கிரியைகள், சைவ மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு வகையான பிரச்சினைகள் இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

இந்தியத் தமிழ்ப் பேரறிஞர்களான சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவப் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணன், இலயோலாக்கல்லூரிப் பேராசிரியர் அருணவடிவேலு, முதலியர் பாலறாவாயன் மற்றும் இலங்கை, இந்திய சைவத் தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வர்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் அனுசரணையுடன் இந்த மாநாடு நடத்தப்படும்.

இதேவேளை -

மேற்படி சைவமாநாடு குறித்த கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயக்கிரியைகள், ஆலய நிர்வாகம் சம்பந்தமாக நடைமுறையில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## பதவிக்குரிய பொறுப்பை உணர்ந்து நடப்பதே அரச அதிகாரிகளுக்கு சிறந்த அணிகலனாகும்

### நினைவு அஞ்சலி நிகழ்வில் உரை

வலிகாமம்தெற்கு,ஏப்.9

பதவிக்குரிய பொறுப்பை உணர்ந்து நடத்தலே அரச அதிகாரிகளுக்கு அழகாகும்.

இவ்வாறு தெரிவித்தார் பலாலி ஆசிரியர் கலாசாலை உப அதிபர் சிவ.மகாலிங்கம்.

வலிகாமம் தெற்கு (உடுவில்) முன்னாள் பிரதேச செயலர் அமரர் ஆறுமுகம் மகாலிங்கத்தின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் அண்மையில் உடுவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்று, பன்மொழிப் புலமை உடையவராக விளங்கிய அமரர் மகாலிங்கம், தலைமைத்துவம், பொறுப்பேற்கும் திறன் போன்றவற்றிலும் சிறந்து ,நல்லதொரு நிர்வாகியாக விளங்கினார். அமரர் மகாலிங்கம் போன்ற நிர்வாகத்திறமையுடைய அதிகாரிகள் கிடைப்பது அரிது.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, மனோபலம் என்பவைதான் அமரர் மகாலிங்கத்தை உயர்நிலை அடைய வைத்தன. மக்கள் மத்தியில் இறங்கி சமயத்தை வளர்க்கவேண்டும் எனற விடாமுயற்சி, நாவலர் சிலையை இடம்மாற்றியமையை எதிர்த்து கண்டனம் தெரிவித்த மனோபலம், பொறுப்பேற்கும் துறையில் இருந்த தன்னம்பிக்கை போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

சைவ சமயத்தில் எவரும் அநாதைகள் என்றிருக்கக்கூடாது. ஏழைகளுக்கு ஆதரவுகிடைக்காத நிலையில்தான் அவர்கள் மதம்மாற நினைக்கிறார்கள். ஏழைகளுக்குத் தொண்டு செய்வதாகக் கூறிவந்து மதம் மாற்றும் கொள்கையுடையவர்களை அவர் கடுமையாக எதிர்த்தார் - கண்டித்தார் - எனக் கூறினார்.

பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

20,25 வருடங்களாக போர்ச் சூழலில் பல இன்னல்களை அனுபவிக்கும் மக்களுக்கு எவ் வழிகளில் செயலாற்றலாம் எனச் சிந்தித்து தன் அதிகார சக்திக்கு உட்பட்டு வலி. தெற்கு மக்களுக்காக மகத்தான தொண் டாற்றியவர் அமரர் மகாலிங் கம்.

தான் பிறந்த ஊரை நேசித்தாலும்,ஏனைய கிராமங்களையும் பொது நோக்கோடு நேசித்தவர். இவர் இநது சமயத்தில் ஏற்பட்ட தொய்வை நிவர்த்திக்க முயன்றார். கைதடி சைவச் சிறுவர் இல்லத்தை பொறுப்பேற்று நடத்தினார். மத மாற்றத்தை வன்மையாகக் கண்டித்தார். நிர்வாக சேவை அலுவலர்களுக்கு பற்றாக்குறை நிலவும் இக்காலத்தில் அவரது இழப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டம் ஒரு சிறந்த நிர்வாகியை இழந்துவிட்டது - எனக் கூறினார்.

பிரதேசசெயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன், உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன், ஆசிரியர் ஆறு.திருமுருகன், சமுர்த்தி முகாமையாளர் ந.காசிவேந்தன், சுன்னாகம் தெற்கு கிராம சேவையாளர் எஸ்.வைத்தியநாதன் ஆகி யோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர்.

வாழ்வக பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக அமரர் மகாலிங்கம் நினைவாக, பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தின் சார்பாக பிரதேச செயலாளர் க.கேதீஸ்வரனால் ஒரு தொகைப் பணம்அன்பளிப்புச் செய்யப்பட்டது.

க-7-152)

## நாளை

பங்குனி 27
புதன்கிழமை
(10.04.2002)
திதி : திரயோதசி
முன்னிரவு 9.43 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு 10.49 வரை.
பிரதோஷ விரதம்
[illegible] : 04.36 - 06.06
ராகுகாலம்: 12.06 - 01.36
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

இரக்கம் மட்டும் இருப்பதால் பயனில்லை. எண்ணியபடி உதவி செய்ய வேண்டும் என்ற உறுதி இல்லாதபோது இரக்கம பயன்படுவதே இல்லை.

## கசூரினா பீச்சில் நின்ற காரில் ரேடியோ திருடியவர் பிடிபட்டார்

காரைநகர்,ஏப்.9

காரைநகர் கசூரினா கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த காரில் இருந்து பெறுமதிவாய்ந்த 'ரேடியோ செற்'றினை திருடியவரை காரைநகர் வட கிழக்கு கிராம சேவையாளர் அவ்வூர் பொதுமக்களின் உதவியுடன் மட்டக்கிப் பிடித்து திருடப்பட்ட பொருள்களை கைப்பற்றி உரியவர்களிடம் மீள ஒப்படைத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கசூரினா கடற்கரைக்கு காரில் வந்தவர்கள் அதனை நிறுத்திவிட்டு கடலில் குளிக்கச் சென்ற சமயமே இந்தத் திருட்டு நடந்துள்ளது. இது தொடர்பாக கார் உரிமையாளர் அப்பகுதி கிராம சேவையாளரிடம் முறையிட்டார்.

அதைத் தொடர்ந்து கார் தரித்து நின்ற பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியவர்களை தீவிர விசாரணை மேற்கொண்ட கிராம சேவையாளர் பொதுமக்களின் உதவியுடன் திருடனைப் பிடித்து காரில் இருந்த 'ரேடியோ செற்' உட்பட 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை மீளப்பெற்று உரியவரிடம் ஒப்படைத்ததுடன் திருடனையும் எச்சரிக்கை செய்து அனுப்பினார். (க-73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காத் தமிழர்களின் ஆர்ப்பரிப்பு...!





விடுதலைப் புலிகளை வரவேற்பதற்காக குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் நேற்று காலை முதல் முகமாலை நோக்கிச் சென்ற பல்லாயிரக் கணக்கான மக்களை மிருசுவில் சந்தியில் படையினர் தடுத்து நிறுத்தி வைத்திருந்தனர். இதனால் மக்களும் இராணுவத்தினரும் கடும் வாக்கு வாதங்களில் ஈடுபட்டிருக்கும் காட்சிகளை மேலே முதலில் உள்ள படங்களில் காணலாம்.


ஒரு கட்டத்தில் படையினரின் உத்தரவுக்கு அடங்க மறுத்த பொதுமக்கள் ஆர்ப்பரித்துக்கொண்டு வீதித் தடையைக் கடந்து புயல் என விரைந்தனர்.

அச்சமயம் எடுக்கப்பட்ட படங்களையும் இங்கே காணலாம்.

படங்கள்: பிரேம்













கண்டி வீதியால் முகமாலை நோக்கி விரைந்த ஊர்திகளையும் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களுடன் வீதியோரத்தில் காத்திருந்த பெண்களையும் இந்தப்படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரவேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற சமயம்

# நேற்று நடந்த இரு விபத்துகளில் பொலீஸார் உட்பட 4 பேர் காயம்

விடுதலைப் புலிகளை வரவேற்பதற்காக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் முகமாலைக்கு படையெடுத்துச்சென்ற சமயம் ஏற்பட்ட இரு வீதி விபத்துக்களில் சிக்கி ஒரு பொலீஸார் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

கொடிகாமத்துக்கும்மிருசுவிலுக்கும் இடையில் பொலீஸாரின் மோட்டார் சைக்கிளும் பொதுமகன் ஒருவரின் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் மூவர் காயமடைந்தனர்.

நெல்லியடி பொலீஸ் நிலையத்தைச்சேர்ந்த எஸ்.சூரியபாலா (வயது -42) என்ற பொலீஸாரும் உடுவிலைச் சேர்ந்த கணேசன் ராஜசுரேஸ் (வயது -29) ரி.சந்திரன் (வயது-29) ஆகிய மூவருமே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர். இதேவேளை -

முகமாலைப் பகுதியில் ஆட்டோ மோதி யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட மூன்றாம் வருட மாணவன் அன்னலிங்கம் சுதர்சன் (வயது - 24), என்பவரும் காலில் காயமடைந்தார். இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-6-4-15-5)

## நூற்றுக்கணக்கில் வாகனங்கள்

நேற்றைய வரவேற்பு நிகழ்வில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் அணிஅணியாகக் கலந்துகொண்டன.

பஸ்கள், கார்கள், வான்கள, லொறிகள் என்று நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் போராளிகளை வரவேற பதற்காக வந்திருந்தனர்.

குடாநாட்டில் இவ்வளவு எண்ணிக்கையான வாகனங்கள் இருக்கின்றனவா என்று படை அதிகாரிகளே வியக்குமளவுக்கு வாகனங்களின் எணணிக்கை இருந்தது என்பது குறிபபிடத்தக்கது. (ம)

## மினிபஸ் விபத்தில் மூவர் காயம்

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை வரவேற்பதற்காக பொதுமக்களை ஏற்றிச்சென்ற மினிபஸ் ஒன்று நேற்று கைதடிப் பகுதியில் விபத்துக்குஉள்ளானது.

கைதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பனை மரமொன்றுடன் மோதி இந்த மினிபஸ் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த மூவர் காயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றைய இருவரும் சிறு காயமடைந்த நிலையில் வேறு வாகனத்தில் முகமாலை நோக்கிச் சென்றனர். (ம-10-8)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நிராவியடி, யாழ்நகர்.
பிரிவு 1 O/L DAY CLASS
எமது வழமையான ஆசிரியர் குழு
விஞ்ஞானம்: (2667)
இரா.செல்வவடிவேல்
ஆரம்பம்: 10-04-2002 புதன் 8.00

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
09~04~2002



மறவன்புலோவைச் சேர்ந்த
ஜனார்த்தனன் காந்திமதி
தம்பதிகளின்
புதல்வி
சானுஜா (கஜனி)
இன்று [09.04.2002] செவ்வாய்க்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை அன்பு அக்காவுடன் கொண்டாடுகின்றார்.
கஜனியைப் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் துர்க்கை அம்மன் அருளுடனும் பல்லாண்டு வாழ அனைவரும் வாழ்த்துகின்றனர்.
சித்தன்கேணி. R.ஜனார்த்தனன் (அப்பா)
(C/21559)

அறிவித்தல்
இராமநாதன் நுண்கலைத்துறை 4ஆம் வருட அனைத்து மாணவர்களுக்குமான குழுப்படமெடுத்தல் இன்று (09.04.2002) பி.ப.3.30மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவிருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி வேண்டிக்கொள்கின்றேன்.
இராமநாதன் நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம். (2691) 4ஆம் வருட பிரதிநிதி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மலர்மங்கை கணேஸ்வரசர்மா

சுன்னாகம் கதிரமலை சிவன் கோயிலடியைச் சேர்ந்த திருமதி மலர்மங்கை கணேஸ்வரசர்மா அவர்கள் 07.04.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வல்வெட்டித்துறை சிவன் கோயில் முன்னாள் பிரதமகுரு காலஞ்சென்ற வீ.பரமேஸ்வரக்குருக்கள் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் சுன்னாகம் சிவன் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ச.தியாகராஜா சிவஐயர் தம்பதிகளின் மருமகளும் முன்னாள் வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் தி.கணேஸ்வரசர்மாவின் பாசமிகு தர்மபத்தினியும் காலஞ்சென்றவர்களான பகீரதன் சுகந்தி மற்றும் வற்சலா, சண்முகநாதனின் பாசமிகு தாயாரும் நா.சண்முகநாதன் (ஆசிரியர், ஹற்றன் கொன்வென்ற்) அவர்களின் மாமியாரும் ஸ்ரீவற்சன், அருண்பிரசாத் ஆகியோரின் பேர்த்தியாரும் மனோகரக் குருக்கள், மலரகிதசர்மா மங்கையர்க்கரசி ஆகியோரின் சகோதரியும் உமாகாந்தன், கௌரிபாலா, காயத்திரி ஆகியோரின் மைத்துனியும் நவரத்தினம், குமாரசதாசிவசர்மா, சரவணபவசர்மா, காலஞ்சென்ற சிறிதரசர்மா, சுலோசனா, கிருபாகரன், வசந்தி ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கதிரமலை சிவன்கோயிலடி,*
*சுன்னாகம்.* (2689)
தி. கணேஸ்வர சர்மா (கணவர்)

## செல்வராஜா சுகுணகுமார்

(G.S. லிங்கநாதன் ஊழியர்)

சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் சங்கானையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா சுகுணகுமார் 07.04.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராஜா-அன்னலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் கயூரிகாவின் பாசமிகு தந்தையும் உதயகுமார் (ப.நோ.கூ.சங்கம்-நல்லூர்), வசந்தகுமாரி (B.A. ஆசிரியை, மாத்தளை), ஜெயந்தகுமார் (B.A. ஆசிரியர், திருகோணமலை), சிவகுமார் (B.Sc. நஷனல் சேவிங் வங்கி, திருகோணமலை), விஜயகுமாரி (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்) ஆகியோரின் சகோதரனும் சந்தானம் (B.Com. கிராமிய வங்கி முகாமையாளர், மாத்தளை), சத்தியசேகர் (லண்டன்), தயாளன் (தயாளன் வீடியோ அன் கொமினிகேசன் உரிமையாளர்), அம்பிகை, சாந்தலட்சுமி, வசந்தலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் தயா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வல்லை வீதி,*
*சங்கானை.* (2689)
செ.உதயகுமார் (சகோதரன்)

## லயன் A.C.செபநாயகம்

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட (ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்) லயன் A.C.செபநாயகம் நேற்று (08.04.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை தம்பதியினரின் அருமைமகனும் திரு. திருமதி சுவாம்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புக் கணவரும் அருள்நாயகம் (Ceylon Tobbaco Company, Executive Marketing Officer), புவிநாயகம் (Engineer - Australia), Dr. திருமகள் சிவசங்கர் (LRH-Colombo), திருமதி செல்வமகள் மோகனதாஸ் (ஆசிரியர் கலாசாலை - பலாலி), திருமதி ஞானமகள் அசோகன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் திருமதி ஜினா, திருமதி அமுதினி, Dr.சிவசங்கர் (யாழ். போதனா வைத்தியசாலை), மோகனதாஸ் (விளையாட்டு அதிகாரி - சண்டிலிப்பாய்), Dr. அசோகன் (போதனா வைத்தியசாலை-கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் மரியாம்பிள்ளை தொம்மைக்குட்டி, பேரின்பநாதன், செபமணி (ஆசிரியர்-மானிப்பாய் இந்துக் கல்லூரி), திருமதி மரியதாஸ் திருமதி ராஜரட்ணம், திருமதி இருதயநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் திருமதி லூர்துமேரி, திருமதி ஜெஜீனா, திருமதி மேரிநாயகி, திருமதி நேசம்மா, Dr.மரியதாஸ், காலஞ்சென்ற ராஜரட்ணம் மற்றும் இருதயநாதன் (பொறியியலாளர்-யாழ்ப்பாணம்), திருமதி புஸ்பராணி செபதேயு, திருமதி சாந்தம்மா கிருஷ்ணசெட்டி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கெலன், யூலியா, தானியா, கென்றி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (2693)
S.அருள்நாயகம் (மகன்)

## திருமதி தெய்வேந்திரம் வசந்தரஞ்சினி

வாகையடி மீசாலை மேற்கைச் சேர்ந்த திருமதி தெய்வேந்திரம் வசந்தரஞ்சினி நேற்று (08.04.2002) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் சுப்பிரமணியம் தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும் சுதர்சினி, சுபாஸ் (U.K.), சிவதர்சன், சுதர்சன், பிரதாப் ஆகியோரின் அன்புத் தாயாரும் உமாசங்கரின் அன்பு மாமியாரும் கிருசாந்தின் அன்புப பேர்த்தியும் மார்க்கண்டு - மகேஸ்வரியின் அன்பு மகளும் சுப்பிரமணியம் - சிவபாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும் வளர்மதி (இந்தியா), கருணாநிதி (சுவிஸ்), மகேந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2002) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொற்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.* (2695)
சு.தெய்வேந்திரம் (கணவர்)

தேவை
பத்திரிகை மடிப்பதற்கு ஆள்கள் தேவை.
14-03-2002பத்திரிகையில் வெளியான விளம்பரத்திற்கு இசைவாக விண்ணப்பித்தவர்களும் சமுகம் தரலாம்.
உதயன் பத்திரிகை நிறுவனம்,
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/21563)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
O/L DAY CLASS பிரிவு 3
ஆரம்பம்:10-04-2002 (8.30 - 2.00)
* பிரிவு II இற்கான வகுப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னரே அனுமதிகள் நிறைவுற்றது.
* பிரிவு III இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
* பழைய பாடத்திட்டத்திற்கமைய வகுப்புகள் பிரித்து நடத்தப்படும்.
பிரிவு I (புதன் 8.30 ஆரம்பம் 10-04-2002)
* பிரிவு IV வெகுவிரைவில். (2680)

# மரண அறிவித்தல்

## கிருஸ்ணபிள்ளை சதாசிவம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சதாசிவம் சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தங்கமணியின் அன்புக் கணவரும் சிவனேசன் (சுவிஸ்), சிவகுமார் (சாவகச்சேரி), சிவதாசன் (லண்டன்), சியாமளா (கொழும்பு), சிவசுதன் (வவுனியா), சகுந்தலா (கனடா), சிவரூபன் (சவுதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தி, பாலாஜீவினி, பாமதி, சுப்பிரமணியம், விஜிதா, சிறிராமசந்திரன், ரூபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சியாந்தா, சதீஸ்குமார், நிரோஷன், நிலக்ஷன், கஜானி, நிருஷன், சஜீவன், சயிப்பிரியா, சைலைஜன், சாய்ராம், சுஜாந், ரஜாந்தி, சாரங்கன், சாயிதா, கிருஷானி, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2002) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*"வளர்மதி",*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில். (புகையிரத வீதி)*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (2696)

O/L சித்தி பெற்று........
A/L 2004இல் படியேறும் மாணவர்க்கு எம் வாழ்த்துக்கள்!
உங்களுக்காகவே!!
ECONOMICS
பிரத்தியேக வகுப்பு
By. Mr.தயாபரன் B.A. (Econ.) Spl.
நாளை 10-04-2002 10.00 a.m.
நாவலர் - ஆனைப்பந்தி
யாழ். கல்வி நிலையம் - ஆறுகால்மடம்
நியு லக்கி - நாவடி
நவராஜன் கல்வி நிலையம் - சித்தன்கேணி.
ECONOMICS MAN ACADEMY
(2592) மானிப்பாய்.

நாகம்ஸ் சுன்னாகம்
இளைய தளபதி விஜய், மீனா நடித்த
ஷாஜகான் (ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.00 (புதியநேரம்)
இந்தியாவில் வெளியாகும் அதே நாளில் நாகம்ஸ் சினிமாவிலும்
பிரசாந்த் நடித்த தமிழ் வெளியாகும். (2681)

ராஜா யாழ்ப்பாணம்
11.04.2002 வரை
பிரசாந்த், மும்தாஜ் (இருவேடம்), லிவிங்ஸ்டன், சுகாசினி நடித்த
சாக்லெட்
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.00
தினசரி: 10.30, 2.30 (பு.நே.)
அடுத்த வெளியீடு
விஜய் நடித்த தமிழன் (C/21396)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந்த், ஜோதிகா, ரகுவரன் நடித்த
ஸ்டார் ரீஸ்ஸ்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
12ஆம் திகதிவரை (C-21550)

A/L 2004
வர்த்தகம்
பொருளியல் - ஜெயக்குமார்
கணக்கீடு - தவா
வணிகக் கல்வி - முரளி
கலை
தமிழ் - பாலா
அளவையியல் - சயந்தன்
இந்துநாகரிகம் - சுரேஸ்
புவியியல் - குமரன்
நாடகம் - உங்கள் ஆசிரியை
கணிதம்
பௌதிகவியல் - கருணாநிதி
இணைந்த கணிதம் - அம்பி
இரசாயனவியல் - உங்கள் ஆசிரியர்
(2657) ஆரம்பம் - 11-04-2002 - 3.30 p.m.
C.C.A., சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை திறப்பை ஒட்டி வைபவம் ஏதும் இல்லை

## கடைசி நிமிடம் வரை அரசு இழுத்தடித்தது

யாழ்ப்பாணம்,ஏப்.9

குடாநாட்டுக்கான தரைப்பாதை கிளிநொச்சியில் இருந்து முகமாலை ஊடாக நேற்றுமுதல் திறக்கப்பட்டிருக்கிறது.

பாதை திறப்பை ஒட்டி வைபவ ரீதியான எந்த நிகழ்ச்சியும் நேற்று அங்கு நடைபெறவில்லை. திறக்கப்பட்டிருந்த அந்த வீதியின் ஊடாக விடுதலைப் புலிகளின் முதல் அணியினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நிகழ்வே அங்கு நடத்தது.

பாதை திறப்பு பெரும் ஆரவாரங்களுடன் உத்தியோகபூர் வைபவமாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இறுதியில் எல்லாம் பிசுபிசுத்துப்போனது.

அமைச்சர்களோ வேறு எந்த அரசுப் பிரமுகர்களோ பாதை திறப்பு நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

எட்டாம் திகதி பாதை திறக்கப்படும் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அது தொடர்பாக முதல் நாள் ஏழாம் திகதி மாலைவரை அரசுத்தரப்பில் பச்சைக் கொடி காட்டப்படவில்லை எனத் தெரியவருகிறது.

பாதை திறப்பு விடயத்தில் கடைசி நேரம் வரை இழுபறிநிலை தொடர்ந்ததாகக் கூறப்படுகிறது.

பாதை திறப்பு நிகழ்வைப் பெரும் ஆரவாரமான வைபவமாகக் பெரிது படுத்திக்காட்ட அரசு விரும்பவில்லை இதனாலேயே கடைசிநேரம்வரை அரசு இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடித்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதை திறப்பு நிகழ்வை குறிப்பிட்ட தினத்தில் நடத்தி முடிக்க நோர்வேத்தரப்பும் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளும் கடைசிநேரம் வரை தீவிரமுயற்சி மேற்கொண்டதாகவும் அறியவந்தது. (ஐ)

## நேற்று வந்த போராளிகளின் விவரம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.குடாநாட்டில் அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்காக புலிகள் பிரமுகர் ஆஞ்சநேயர் தலைமையில் 15 போராளிகள் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்.

நேற்று வந்து சேர்ந்த போராளிகளின் விவரம் வருமாறு:-

இளம்பரிதி, அன்பரசன், அருளன், எழிலரசன், இறையவன், இலக்கியன், செந்தமிழ், தயாளன், நல்லவன், நல்லையா, பாரதி, தமிழ் விழி, தமிழ் நிலா, மதி, செம்மணன்

(ம-7-4)

## கொட்டும் மழைக்கு மத்தியில் மக்கள் வான் அதிரக் கோஷம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

புலிகளை வரவேற்பதற்காக நேற்றுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொடிகாமம் பகுதியில் திரண்ட சிறிது நேரத்தில் எல்லாம் அந்தப் பிரதேசத்தில் பலத்த மழை பெய்யத் தொடங்கியது.

கொளுத்திய வெயிலையும் பொருட்படுத்தாது அங்கு வந்து சேர்ந்த மக்களுக்குத் திடீரெனப் பெய்த கோடை மழை தாகசாந்தி அளிப்பது போல் அமைந்தது. குடாநாட்டில் இந்தப் பிரதேசத்தில் மட்டுமே நேற்று மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

கொடிகாமம், முகமாலை, பளைப பகுதிகளில் நேற்றுப் பிற்பகல்வரை பெரும் மழை விட்டுவிட்டுத் தொடர்ந்தது. மழையில் நனைந்தபடி நின்று மக்கள் போராளிகளை உணர்ச்சி ததும்ப வரவேற்றனர். புலிகளை வரவேற்கும் ஆவலே அவர்களிடம் மேலோங்கி இருந்தது. மழையையோ வெயிலையோ அவர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

'எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்...,' 'மக்கள் எல்லாம் மக்கள் எல்லாம் பிரபாகரன் பக்கம்' போன்ற புரட்சிப் பாடல்களை இசைத்தவாறு மழையில் நனைந்தபடி புலிகளை வாழ்த்திக் கோஷமிட்டகாட்சி உணர்வுபூர்வமாக [illegible] (ஐ-ம)

## சொற்ப பயணிகளே நேற்று ஏ-9 பாதையூடாகப் பயணம்

### பஸ் போக்குவரத்து உடனடிச் சாத்தியம் இல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.9

குடாநாட்டுக்கான ஏ-9 கண்டி வீதி போக்குவரத்துக்காக நேற்றுத் திறக்கப்பட்டபோதும் சொற்ப பயணிகள் மட்டுமே அப்பாதை ஊடாக வன்னி செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நண்பகல் அளவில் பாதையூடாக போராளிகள் குடாநாட்டுக்குள் பிரவேசித்த பின்னர் செய்தியாளர்களின் வாகனங்களும், அரச அதிகாரிகளின் வாகனங்களும் குடாநாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டன.

வவுனியாவில் இருந்து பஸ் ஒன்றில் முகமாலை நோக்கி வந்த 35 பயணிகள் ஓமந்தையில் விடுதலைப் புலிகளால் மறிக்கப்பட்டனர். பின்னர் அங்கிருந்து அவர்கள் தமிழீழ போக்குவரத்துக்கழக பஸ்மூலம் முகமாலைக்குக் கூட்டிவரப்பட்டனர்.

பயணிகள் வந்த பஸ் ஓமந்தையில் வைத்து புலிகளால் வவுனியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.

தமிழீழ போக்குவரத்துக்கழக பஸ்களில் முகமாலை வந்தடைந்த பயணிகள் பாதையைக் கடந்து நேற்று மாலை 6.30 மணியளவில் யாழ். பஸ் நிலையத்தை வந்தடைந்தனர்.

இதேவேளை -

குடாநாட்டில் இருந்து சைக்கிள்கள்மூலம் சென்ற பயணிகளும் முகமாலை ஊடாக வன்னி செல்ல அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நேரடி பஸ் சேவை உடனடியாக அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

மோட்டார் சைக்கிள், தனியார் வாகனங்கள் என்பன மட்டுமே அடுத்த சில தினங்களுக்கு இப்பாதையூடாக அனுமதிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ம-3-4)

## மிருசுவிலில் படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து நிறுத்தினர்.

பாதை திறப்பதற்கான நேரம் நெருங்கியதும் மக்களை உள்ளே அனுமதிப்பதாக படைத்தரப்பில் கூறப்பட்டது. மக்கள் தொடர்ந்தும் அங்கு வந்து குவிந்தவண்ணம் இருந்தனர். வாகன அணிகளும் அலங்கார ஊர்திகளும் வீதிகளை அடைத்து நின்றன. மக்கள் அங்கு வந்து குவியக்குவிய நிலைமை மேலும் மோசமடைந்தது.

தங்களை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு கோஷமிட்ட பலர், படையினரை நெருங்கி வாக்குவாதப்படவும் செய்தனர். படையினர் கூறிய காலக்கெடு நீண்டுகொண்டே சென்றது மக்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கினர்.

இதனால் தடுத்து நின்ற படையினருக்கும் தடையை மீற முயன்ற பொது மக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இவ்வேளையில் பேரணியின் பின்னால் நின்ற அலங்கார ஊர்திகள் மெல்ல மெல்ல நகர்ந்து முன்னணிக்கு வந்தன. அதிலிருந்து 'இந்த மண் எங்களின் சொந்த மண்' என்ற எழுச்சிப்பாடல் இசைக்கப்பட்டது. அதே சமயம் நிகழச்சி ஏற்பாட்டாளர்கள் சிலர் இராணுவத்தினருக்கு நிலைமையை விளக்கிக்கூறி நிலைமையை சுமுகமாக்க முயன்று கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே மக்கள் வெள்ளம் படையினரின் தடைகளைத் தகர்த்துக் கொண்டு பாய்ந்து முன்னேறியது.

கரைபுரண்டோடிய மக்கள் வெளளத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் படையினர் திணறினர். பின்னர் திடீரென தங்களை சுதாகரித்துக்கொண்ட படையினர் - ஒரு தொகுதி மக்கள் வெளியேறிய பின்னர் - மீண்டும் பாதையை மூடி பொதுமக்களைக் கட்டுப்படுத்த முயன்றனர். ஆனால் அவர்களின் கட்டுப்பாடுகளுக்கு மக்கள் மசியவில்லை. படையினரைத் தள்ளி ஓரங்கட்டிவிட்டு அவர்கள் தம்வழியே முகமாலை நோக்கி வீறு நடைபோட்டனர்.

எனினும் இதேபோன்றதொரு தடை அரணை முகமாலைப் பகுதியில் ஏற்படுத்திய படையினர் அங்கு மக்களைத் தடுத்து நிறுத்தினர். அங்கும் மக்களைத் தடுத்து நிறுத்தினர்.

அங்கும் படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையே மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டது. ஆனால் பாரிய புல்டோஸரைக் கொண்டு வீதியின் குறுக்காக பலமான தடை அரணை படையினர் ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் அதனையும் தாண்டி-தகர்த்து முன்னேறும் உணர்ச்சிகரமான நிலையில் மக்கள் இருந்தனர்.

எனினும் அதற்கிடையில் பாதை திறக்கப்பட்டு போராளிகள் உள்ளே வந்ததும் அவர்களை வரவேற்பதற்காக மக்கள் செல்லக்கூடிய வகையில் படையினர் தமது தடைகளை அகற்றியதனால் நிலைமை சுமுகமானது.

(ம-3-4-5-12-13-117-180)

## சமாதான சூழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழித்துவந்தன. ஆனால் எமது மக்கள் எப்போதும் எம்முடன் இணைந்து இருந்ததால் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்ததுடன் மக்களும்; புலிகளும் ஒன்று என்றாகினர். இன்று இங்கு காணப்படுகின்ற மக்கள் எழுச்சி இதனை நிரூபித்துள்ளது.

'யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டேன். ஏ-9 பாதையூடாக விரைவில் வன்னிக்கு வருவேன் என்று மார்தட்டியவர் இன்று சிறைக்கூண்டில் உள்ளார்.

ஆனால் நாங்கள் ஏ-9 பாதையைத் திறந்து இங்கு வந்துள்ளோம். இது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பொதுமக்கள் தமது சொத்துக்களை, வாழ்விடங்களை கைவிட்டு, உயிரை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்குச் சென்றனர். தலைவரின் தேசியத்தைப் பின்தொடர்ந்து நகர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் மீண்டும் இங்கு திரும்பினர். எஞ்சியோர் வன்னி சென்றனர்.

வன்னி சென்ற மக்கள் தினம் தினம் செத்துச் செத்து தமிழ்த் தேசியத்தைக் கட்டி வளர்த்தனர். வாழ்க்கைப் போராட்டம் ஒருபுறம் உயிர்ப் போராட்டம் மறுபுறம் என வாழ்ந்து இன்று சாதனை படைத்து நிற்கிறார்கள்.

'யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தமது உயிரைத் தியாகம் செய்யக் களம் இறங்கியுள்ளனர்' என்று தலைவர் பிரபாகரன் கூறினார். அதேபோன்று உயிரைப் பணயம் வைத்து 'பொங்கு தமிழ்' நிகழ்வை நடத்தி போராட்டத்துக்கு வலுச்சேர்த்தவர்கள் யாழ்ப்பாண மக்கள் என்பதை மறக்க முடியாது. பொங்கு தமிழ் நிகழ்வு மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு தலைமைதான் என்பதை உலகுக்குக் காட்டியவர்கள் இங்குள்ள மக்களே ஆவர்.

உலகில் புலிகளின் சக்தி சாதாரண சக்திதான் என்று அரசு செய்து வரும் பிரசாரங்களுக்கு ஆப்பு வைத்துள்ளனர் எமது மக்கள். மக்கள் பலம் கொண்ட மாபெரும் சக்தி விடுதலைப் புலிகள் என்பதை எமது மக்கள் உலகுக்கு உணர்த்தியுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 50 போராளிகள் வந்துள்ளனர். அடுத்த மாதம் மேலும் நூறு பேர் வருவர். 3ஆம் மாதத்தில் முழுப் போராளிகளுமே இங்கு வருவர். ஆனால் இந்த மண்ணில் உள்ள மக்களால் சோறு ஊட்டி வளர்க்கப்பட்ட பல போராளிகள் இன்று மாவீரர்களாகிவிட்டனர்.

எவருக்கும் விலை போகாத சக்திகளாக கடந்த 7ஆண்டுகள் மக்கள் இங்கு வாழ்ந்தனர். பெரும் நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் ஆகியன மக்கள் மீது திணிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தை மீட்போம் என்று தலைவர் பிரபாகரன் தனது 2000 ஆம் ஆண்டு மாவீரர் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். அதன்படி இன்று சமாதானப் பாதையில் இவ்வளவு தூரம் முன்வந்துள்ளோம்.

### புலிகள் யுத்தவெறியர்கள் அல்லர்

நாம் இரத்த வெறியர்கள் அல்லர். யுத்தப் பிரியர்களும் அல்லர். இரத்தம் இன்றி, யுத்தம் இன்றி சுய கௌரவத்துடன் சுடிய தீர்வைக் காணவே மக்கள் விரும்புகின்றனர். அதுவே எமது விருப்பமாகும்.

எமது தலைவர் இன்று ஸ்ரீலங்கா அரசுத் தலைமையுடன் சமமான நிலையில் இருந்தே உடன்பாட்டைக் கண்டுள்ளார். அதன்மூலம் நாம் இங்கு வந்துள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரபாகரன் என வர்ணித்து தேர்தல் பிரசாரம் செய்தார் சந்திகா. பிரபாகரன் வேண்டுமா நான் வேண்டுமா என்று கேட்டு அவர் பிரசாரம் செய்தார். ஆனால் தெற்கு மக்கள் சமாதானம் வேண்டுமானால் பிரபாகரன் வேண்டும் என்று ஆணை வழங்கிவிட்டனர் - என்றார் இளம்பரிதி.

(ஐ-3-8-10-111)

## யாழ். குடாநாடே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து போராளி களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரும், வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் படையினரின் பகுதிக்கு அழைத்துவந்தனர். அதற்கு முன்பாக போராளிகளை வழி அனுப்பி வைப்பதற்காக பெரும் எண்ணிக்கையான புலிகள் இயக்கப் போராளிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் திரண்டிருந்தனர். கொழும்பில் இருந்து வந்த அரச அதிகாரிகளும் ஊடகவியலாளர்களும் அங்கு கூடியிருந்தனர்.

போராளிகளை எதிர்கொண்டு வரவேற்பதற்காக யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய, படை அதிகாரிகள் சகிதம் படையினரின் முன்னரங்கப் பகுதியில் காத்துநின்றார்.

புலிகளின் தளபதிகளான கேணல் பானு, கேணல் தீபன் ஆகியோரும் படைத்தளபதியும் பின்னர் இரு தரபபு நிலைகளுக்கும் இடைப்பட்ட ஆள்களற்ற பகுதிக்கு நடந்து வந்தனர். அவர்களோடு செஞ்சிலுவை அதிகாரிகளும் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும் உடன் வந்தனர்.

பரம எதிரிகளாக விளங்கியவர்கள் - பெரும் போர்முனையாக விளங்கிய ஒரு வீதியின் நடுவே - சந்தித்துக் கொண்ட காட்சி உணர்வுபூர்வமாய் அமைந்தது.

கேணல் தீபன், கேணல் பானு ஆகியோருக்கு தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய கைலாகு கொடுத்து வரவேற்றார்.

போராளிகளும் படை அதிகாரிகளும் ஏனையோரும் பின்னர் சிறிது நேரம் அவ்விடத்தில் நின்று உரையாடினர்.

அதன்பின் 15 போராளிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர்.

வாகனம் ஒன்றில் வந்த போராளிகள் முகமாலையில் பொதுமக்கள் திரண்டிருந்த பகுதியை நெருங்கியதும் அங்கு பெரும் ஆரவாரம் ஏற்பட்டது.

படையினரின் கட்டுப்பாடுகளை மீறிக் கிளர்ந்தெழுந்த மக்கள் கரகோஷம்செய்து ஆரவாரம் செய்தவாறும், வான் அதிரக் கோஷங்களை எழுப்பிக் கொண்டும் போராளிகளை நோக்கி ஓடிச்சென்று அவர்களது வாகனத்தை முற்றுகையிட்டனர். சிலர் மாலைகளை வீசினர். இனிப்புப் பண்டங்களைப் பரிமாறினர். வீதியில் குழுமி நின்று ஆடிப்பாடினர். அலங்கார ஊர்திகள் முன்னகர பின்னால் போராளிகளின் வாகனம் மெல்ல நகர்ந்து வந்தது. அந்த வாகனத்துக்கு முன்பாக 'பான்ட்' இசைக் கருவிகளை மாணவர்கள் இசைத்துச் சென்றனர்.

போராளிகள் கைகளை அசைதது மக்களுக்கு நன்றி தெரிவித்தவாறு காணப்பட்டனர்.

அந்த வாகன அணி முகமாலையில் இருந்து கொடிகாமத்தை வந்தடைந்து அங்கிருந்து கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்றது. அங்கு நடந்த அஞ்சலி நிகழ்வுகளில் போராளிகள் கலந்து கொண்டனர். நூற்றுக்கணக்கான பொதுமக்களும் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத் தினர்.

பின்னர் அங்கிருந்து கண்டி வீதி வழியே போராளிகள் வாகன அணியாக செம்மணிப் பகுதிக்கு அழைதது வரப்பட்டனர். கண்டி வீதியில் மீசாலை, சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் வீதியின் இருமருங்கிலும் கூடிநின்று உற்சாக வரவேற்பளித்தனர்.

செம்மணியில் யாழ்.வரவேற்பு வளைவுப் பகுதியிலும் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

அங்கிருந்து நேரே நல்லூர் கோயில் பகுதி நோக்கி மங்கள வாத்தியங்கள் முழங்க அவர்கள் கூட்டிவரப்பட்டனர்.

நல்லூரில் மாபெரும் வரவேற்புக் கூட்டம் நடந்தது.

சுமார் 25ஆயிரம் பேர் அந்தக் கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

பாதை திறப்பு மற்றும் போராளிகளை வரவேற்கும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து நேற்று 50ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொடிகாமத்துக்கு அப்பால் திரண்டிருந்ததாக மதிப்பிடப்படுகிறது.

அண்மைக்காலத்தில் குடாநாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாகக் கிளர்ந்தெழுந்து ஒன்றுகூடிய மாபெரும் நிகழ்வு இது என்று அவதானிகள் மதிப் பிடுகின்றனர்.

புலிகள் இயக்கப் போராளிகளை வரவேற்பதில் யாழ். மக்கள் காட்டிய பேரார்வம் தென்னிலங்கையில் இருந்து வந்த பத்திரிகையாளர்களையே வியப்பில் ஆழ்த்தியது.

நேற்றைய நிகழ்வுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்களின் நூற்றுக்கணக்கான கமெராக்களில் படங்களாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. (ஐ-ம-3-6-9-180)

MOBILE NET COMPUTER SERVICES MCS
324,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்களுக்கான விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.
பதிவுகள் 09-04-2002 [illegible] நேரில்

எமது புதிய வீடியோ CD வெளியீடு
விஜயசாந்தியின்
லேடி சூப்பர் ஸ்டார்
(பிரதிகள் உடன்பெறலாம்)
வீடியோ விமல்
(C/21565) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.